Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



நியாயமான விலையில் தரமான கணனிகளையும் கணனி உதிரிப் பாகங்களையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

Pc Paradise

இல. 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவில் அருகில்)
TP No. 0777-271220 (சி-179)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 4 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 14 (20.11.2002) புதன்கிழமை இதழ் : 51



'நமது ஈழநாடு' - மக்கள் வங்கி இணைந்து நடாத்திய பரீட்சைக் கருத்தரங்கில் மக்கள் வங்கிப் பிராந்திய முகாமையாளர் சிவபாதவிருதையர், 'நமது ஈழநாடு' நிர்வாக இயக்குநர் சிவமகாராஜா, கருத்தரங்கில் பங்குகொண்ட மாணவர் இருவர் மங்கல விளக்கேற்றுவதையும் கருத்தரங்கில் பங்குபற்றிய மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: லிவிங்ஸ்ரன்)

## நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்கேற்ற பரீட்சைக் கருத்தரங்கு

'நமது ஈழநாடு' பத்திரிகை நிறுவனமும் மக்கள் வங்கியும் இணைந்து வேம்படி மகளிர் கல்லூரியில் நடாத்திய க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்கில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்குபற்றினர். நேற்று ஆறு அமர்வுகளாக இக்கருத்தரங்கு நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் வட.பிராந்திய முகாமையாளர் சிவபாதவிருதையர் கலந்துகொண்டு சிறப்பித்தார். மாணவர்களுக்கு மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களும் விநியோகிக்கப்பட்டன.

## இன்று குடாநாடு தழுவிய போராட்டம் ஈ.பி.டி.பியினரை வெளியேறக் கோரி

(யாழ்ப்பாணம்)

இவ்வருட இறுதிக்குள் ஈ.பி.டி.பி குடாநாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும். நெடுந்தீவை விட்டு உடனடியாகவே வெளியேற வேண்டும் எனக் கோரி இன்று குடாநாட்டில் காலை 10 மணிவரை சகல வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டிருக்கும். ஏனைய அரச, கூட்டுறவு நிறுவனங்கள் இன்று முழுநாளும் மூடப்பட்டிருக்கும். போக்குவரத்து நடைபெறாது. எனினும் பாடசாலைகள், அதனோடு சார்ந்த போக்குவரத்துக்கள் வழமைபோல் செயற்படும். இதற்கான தீர்மானங்கள் நேற்று நடை

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியா



சமாதானத்தை எப்பனும் நகர விடக்கூடாது எண்டு நினைச்சிட்டா போல...

# பாதுகாப்பு வலயங்களை நீக்க ஜனாதிபதி மறுப்பு!

## படையினரின் பாதுகாப்புக் கவச வலயங்களாம் அவை!

(கொழும்பு)

**உயர்பாதுகாப்பு வலயங்களை நீக்கி, மக்களை மீளக்குடியமர்த்த வேண்டுமென பாதுகாப்பு உபகுழுவில் விடுதலைப் புலிகள் முன்வைத்த கோரிக்கையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிராகரித்துள்ளார்.**

உயர் பாதுகாப்பு வலயங்களும், காவல் நிலைகளும் - அவசர காலங்களில் படையினருக்கு, பாதுகாப்புக் கவச வலயங்களாகத் (**Buffer Zones**) தொழிற்படுமென்பதால் - அவற்றை நீக்க முடியாது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளதாக இந்தோ - ஏஷியன் செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை - ஒஸ்லோ மாநாட்டில் பங்குபற்றுவதில்லை என்ற இந்தியாவின் தற்போதய நிலைப்பாட்டினையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராட்டியுள்ளார்.

## வீதிக்குக் குறுக்கே குற்றிகள் தீவகத்தில் மக்கள் மறியல்

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாக சரவணைச் சந்தியிலும், வேலணை - துறையூரிலும் வீதி மறிப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

நேற்று இவ்வீதி வழியாகச் சென்ற வாகனங்கள் அனைத்தும் பனங்குற்றிகள், கற்கள் போடப்பட்டுத் தடுக்கப்பட்டன. சரவணைச் சந்தியில் கொட்டும் மழையின் மத்தியிலும் இந்த மறியல் மக்களால் நடத்தப்பட்டது.

வாகனங்களைச் செல்லவிடாது மக்கள் தடுத்தபோது, பொலிசார் அங்கு வந்து வாகனங்களைத் தொடர்ந்து செல்லுமாறு பணித்தனர். எனினும், பொதுமக்கள் வீதிக்குக் குறுக்கே படுத்து மறியல் செய்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தளபதிகளுடன் ஒரு மெய்க்காவலர் பலாலி உயர்மட்ட படை மாநாட்டில் முடிவு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தளபதிகள் தமது கடற்பயணத்தில், ஆயுதம தாங்கிய மெய்க்காவலர் ஒருவருடன் பயணஞ் செய்வதற்கு தமது தரப்பு சம்மதிப்பதாக, கடற்படைத் தளபதி தயா சந்தகிரி அறிவித்துள்ளார்.

பலாலியில் நடைபெற்ற உயர் படைத் தளபதிகளின் கூட்டத்தில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் - அண்மையில் விடுதலைப் புலிகளால் பிரேரிக்கப்பட்ட பாதுகாப்பு விடயங்கள் சம்பந்தமாக ஆராயப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

கடற்படைத் தளபதி தயா சந்தகிரி இது பற்றி மேலும் கூறும்போது-

அமைதிவழிக்கான முயற்சிகள் நடைபெறுகையில் - படையினரும் விட்டுக்கொடுப்புடன் நடக்க வேண்டும் என்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் -

ஆனால் பகிரங்கமாக ஆயுதங்களுடன் நடமாடுவது அனுமதிக்கப்படமாட்டாதெனவும், தனியான வாகனமொன்றில் - போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மேற்பார்வையில் ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்படலாமென்றும் அவர் கூறினார்.

## ஒஸ்லோ நிதியுதவி மாநாடு பற்றி நோர்வே அதிகாரபூர்வ அறிவிப்பு

(ஒஸ்லோ)

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் அமைதி முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதற்கான சர்வதேச உயர்மட்ட மாநாடு எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக நோர்வே வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இந்த அறிவிப்பின்படி - ஒஸ்லோவிலுள்ள ஹொல்மென்கொலென் பார்க் ஹோட்டேல் ரிக்காவில் (**Holmenkollen Park Hotel Rica**)

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் இரண்டு லொறிகள் பாதையை விட்டு விலகி விபத்து!

(வண்ணை)

நேற்றுக்காலை யாழ்.நகரில் ஸ்ரான்லி வீதியில் லொறியொன்று பாதையை விட்டு விலகி அருகிலிருந்த குழி ஒன்றினுள் இறங்கியது. மண்ணினால் மூடப்பட்ட இக்குழி மழை வெள்ளத்தில் இளகியிருந்ததால் அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகளை ஏற்றி வந்த லொறி இம் மணல் குழியினுள் புதையுண்டது.

இதேசமயம் நேற்று மாலை மணல் ஏற்றி வந்த லொறியொன்று கொக்குவில் அம்பட்டப்பாலத்திற்கு அருகேயுள்ள அகழியினுள் பாய்ந்தது. தெய்வாதீனமாக உயிரிழப்புக்கள் ஏதும் ஏற்படவில்லை. இதனால் நேற்றிரவு இவ்வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. (111)



கொக்குவிலில் குடைசாய்ந்த லொறி.

SERENDIB விமான சேவை

எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!

J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 517019

(சி-148)

# மீட்பு நிதிக்கடன் மீளல் விபர அட்டவணை

தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளல்-2002 நேர அட்டவணை தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித்துறையால் வெளியிடப்பட்டுள்ளது.

**21.11.2002 வியாழன்**

| | | | |
|---|---|---|---|
| வருவாய்ப்பகுதிச் செயலகம் | - | முழங்காவில் | மு.ப.09.00 மணி |
| வருவாய்ப்பகுதிச் செயலகம் | - | இலுப்பைக் கடவை | மு.ப 10.30 மணி |
| வருவாய்ப்பகுதிச் செயலகம் | - | ஆண்டான்குளம் | ந.ப 12.00 மணி |
| வருவாய்ப்பகுதிச் செயலகம் | - | மல்லாவி | பி.ப 04.30 மணி |

**22.11.2002 வெள்ளி**

| | | | |
|---|---|---|---|
| ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் | - | ஒட்டுசுட்டான் | மு.ப 08.30 மணி |
| வருவாய்ப்பகுதிச் செயலகம் | - | தண்ணீரூற்று | மு.ப 10.00 மணி |
| வருவாய்ப்பகுதிச் செயலகம் | - | புதுக்குடியிருப்பு | மு.ப 11.00 மணி |
| வருவாய்ப்பகுதிச் செயலகம் | - | விசுவமடு | மு.ப 11.45 மணி |
| கிளி. மத்திய கல்லூரி | - | கிளிநொச்சி | பி.ப 02.30 மணி |

யாழ். மாவட்டத்தில் வதிவோருக்கான மீளளிப்பு கீழ்க் குறிப்பிடும் இடத்தில் நடைபெறும்.

**23.11.2002 சனி**

| | | | |
|---|---|---|---|
| வேம்பொடுகேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை | - | பளை | மு.ப 09.00 - பி.ப 02.00 |

குறிப்பு: முகமாலையிலிருந்து பளை வரையான போக்குவரவு ஒழுங்கு தமிழீழ மீட்பு நிதிச் செயலகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

# நேரடியாகத் தலையிட்டு சட்டம், ஒழுங்கு பேண நடவடிக்கை எடுக்குமாறு ரணிலுக்கு கடிதம்

## யாழ். மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் அனுப்பியது

நெடுந்தீவுச் சம்பவங்கள் அமைதி முயற்சிக்கும், அப்பகுதியின் பாதுகாப்புக்கும் தீவிரமான அச்சுறுத்தலாக உருவாகியுள்ளது. இந்த விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு சட்டம் ஒழுங்கைப் பேண உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவசரக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

போர் நிறுத்த உடன்பாட்டை ஏற்படுத்திய அரசாங்கத்தின் தலைவராகிய தங்களையும் விடுதலைப்புலிகளையும் நாங்கள் என்றும் பாராட்டுகின்றோம். நடந்து முடிந்த இரண்டு சுற்றுப் பேச்சுக்களால் - முன்னேற்றகரமானதும், இனக்குழுக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தத் தூண்டுவதுமான சூழல் உண்டாக்கப்பட்டு நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக நெடுந்தீவில் நடந்துவரும் சம்பவங்கள் அமைதி முயற்சிகளுக்கும், அப்பகுதியின் பாதுகாப்பு நிலைக்கும் தீவிரமான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. அங்கு ஆயுதம் தாங்கிய குழுவொன்றின் பிரவேசத்தினால் இந்நிலை தோன்றியுள்ளது.

இது போர் நிறுத்த உடன்பாட்டின் பிரிவு 1.8 ஐ மீறும் செயலாகும். அங்குள்ள மக்களது சுதந்திரமான நகர்வு தடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தாங்கள் உடனடியாக அர்த்தபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தாங்கள் நேரடியாக இவ்விடயத்தில் தலையிட்டுச் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக்கொள்கின்றது.

மனித உரிமைகளை மீறாமலும் தமது கடமைகளைப் பாரபட்சமின்றி மேற்கொள்ளவும் தாங்கள் படையினருக்குப் பணிப்பு விடுக்கவேண்டும் எனவும் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இன்றைய நாள் இனிய நாள்

**20-11-2002 - புதன்கிழமை**

**சித்திரபானு வருடம் கார்த்திகை மாதம் - 04ஆம் திகதி**

*திதி* :- அபரபட்ச பிரதமை
*நட்சத்திரம்* :- இரவு 8.26 வரை கார்த்திகை அதன்மேல் ரோகிணி
*ராகுகாலம்* :- 12.09 - 1.39
*சுபநேரம்* :- 4.39 - 6.09

**மேடம்** :- உடனலம் சமம், சேமிப்புத் திட்டம் இல்லை, உளநலக்குறைவு, மௌன நிலையைக் கடைப்பிடிப்பது நன்று, கல்வி நிலை சமம், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- உடனலம், உளநலம் நன்று, தெய்வசிந்தனை, பணவரவு, விருந்தினர் வருகை, உடல் குளிர்ந்த உணவு, கல்வி முன்னேற்றம், வியாபார நிலை சமம்

**மிதுனம்** :- உடனலக்குறைவு, உளநலக்குறைவு, கவலைப்பட வேண்டிய செலவுகள், அயலவர்களுடன் மௌனம் சாதிப்பது நன்று, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- உடனலம், உளநலம் நன்று, தெய்வ சேவையில் புகழ், சமய அறிஞர் உறவு, பெண்கள் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார நிலை சமம்

**சிங்கம்** :- உடனலம், உளநலம் நன்று, தெய்வ சேவை, செய்தொழில் முன்னேற்றம், தொழில்ஸ்தானத்தில் நற்பெயர், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- உடனலக்குறைவு, உளநலக்குறைவு, பிதாவின் உடனலம் பாதிக்கப்படுதல், வைத்தியச் செலவு, தேவையற்ற பயம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- உடனலக்குறைவு, உளநலக்குறைவு, பிரயாணம், புதிய கருமங்கள் தொடங்குவது நன்றல்ல, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார நிலைசமம்

**விருச்சிகம்** :- உடனலம், உளநலம் நன்று, பெண்கள் உளப்பூரிப்பு, மதிப்பு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்

**தனு** :- உடனலம், உளநலம் நன்று, எதிரியின் ஆணவ வலி குன்றுதல், தெய்வ பக்தி, கடன் வசூல், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**மகரம்** :- உடனலக்குறைவு, உளநலக்குறைவு, புத்திரர் உடனலக்குறைவு, வைத்தியச் செலவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்

**கும்பம்** :- உடனலக்குறைவு, உளநலக்குறைவு, மாதா உடநலக் குறைவு, துணிவு குறைவு, வீட்டில் செலவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- உடனலம், உளநலம் நன்று, எடுத்த காரியம் வெற்றி, தெய்வவழிபாடு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

## எயிட்ஸ் விழிப்புணர்வு ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

(மீசாலை)

தென்மராட்சிக் கல்வி வலய அனைத்துப் பாடசாலை ஆசிரியர்களுக்கான எயிட்ஸ் விழிப்புணர்வு செயலமர்வு 22ஆம், 23ஆம் திகதிகளில் வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் விஞ்ஞானம், உடற்கல்வி ஆசிரியர்களை கலந்துகொள்ள அறிவுறுத்துமாறு அதிபர்களை வலயக் கல்வி பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுக் கொண்டுள்ளார். (25)

## ஆவரங்காலில் மாவீரர் நினைவு வளைவுகள்

(ஆவரங்கால்)

தமிழீழ மண் மீட்பிற்காக தமது உயிரைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகூரும், மாவீரர் நினைவு நாளையொட்டி ஞாபகார்த்த நினைவு வளைவுகள் ஆவரங்கால் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. (80)


ராஜா யாழ்ப்பாணம்.



தீபாவளி வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.00
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)

நிறஞ்சனாஸ் சங்கானை
கமல், சிம்ரன் நடித்த
பஞ்ச தந்திரம்
காட்சி நேரம்
11.00, 2.45, 6.00
வெள்ளி, சனி, ஞாயிறு மட்டும்
இரவு 8.45 காட்சி
UNIVERSAL SOLDIER
(சி-139)


# விளையாட்டு

## 5ஆவது ஒருநாள் போட்டியில் மேற்கிந்திய அணி வென்றது!

(பரோடா)



மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஐந்தாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 5 விக்கட்டுக்களால் இந்தியாவை வென்றது.

இதன் மூலம் இத்தொடரில் 3:2 என்ற கணக்கில் மேற்கிந்தியத் தீவுகள் முன்னணியிலுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி குறிக்கப்பட்ட 48 ஓவர்களில் 8 விக்கட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களை பெற்றது.

இந்திய அணி சார்பில் வி.வி.எஸ்.லக்ஷ்மன் 71 ஓட்டங்களையும், ஷேவாக் 39 பந்துகளில் 52 ஓட்டங்களையும் கங்குலி 55 பந்துகளில் 53 ஓட்டங்களையும் பெற்றனர். இது கங்குலியின் ஒருநாள் போட்டிகளிலான 50ஆவது அரைச்சதம் என்பது குறிப்பிடத்தக்கது.

பந்து வீச்சில் இடதுகை வேகப் பந்து வீச்சாளர் பெட்ரோ கொலின்ஸ் மூன்று விக்கட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணியில் கிறிஸ் கெய்ல் 101 ஓட்டங்களைப் பெற்றார். இது இத்தொடரில் இவர் பெற்ற 3ஆவது சதம் என்பது குறிப்பிடத்தக்கது. வவெல் ஹின்ட்ஸ் 61 பந்துகளில் 80 ஓட்டங்களையும், ராம் நரேஷ் சர்வான் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.



காயமுற்றதால் அடுத்த இரு போட்டிகளில் இருந்து கங்குலி விலகுகிறார்.

## இரண்டாவது டெஸ்ட்டிலும் இலங்கை அணி தோல்வி!

இரண்டாவதும் இறுதியானதுமான டெஸ்ட் போட்டியில் இலங்கை இரண்டாம் நாளில் மதியபோசன இடைவேளையின்போது தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 323 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஹசான் திலகரட்ண ஆட்டமிழக்காமல் 104 ஓட்டங்களைப் பெற்றார். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா தனது முதலாவது இன்னிங்ஸில் 448 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை தன் இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்கள் பெற்ற நிலையில், 121 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய தென்னாபிரிக்கா 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

## கடத்தப்பட்ட குடும்பஸ்தர் கழுத்து வெட்டிப் படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - மண்முனையில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு, கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

50 வயதான கந்தப்பா கணபதிப்பிள்ளை என்பவரே கொலை செய்யப்பட்டவராவார். இவர் வீட்டிலிருந்து கறுப்பு உடையணிந்த நபர்களால் கடத்திச் செல்லப்பட்டு கழுதது வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். கடந்த சனியன்று கடத்தப்பட்ட இவரது சடலம் மறுநாள் வயல் வெளியொன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

## யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் எந்திரவியல் பாடம் அறிமுகம்

(இணுவில்)

யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில் நாம் இங்கு மகிழ்ச்சியுடன் கற்கைநெறிகளை ஆரம்பிக்கிறோம், இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் நவீன வசதிகளுடன் கூடிய பிராந்திய நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது என,

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் எந்திரவியல் தொழில்நுட்ப பாடத்தின் அறிமுகக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய எந்திரவியல் தொழில்நுட்பப் பீடத்தின் பீடாதிபதி எந்திரி சிசில் பொன்சேகா தெரிவித்தார்.

தற்போது தொழில்நுட்பவியல் டிப்ளோமா, தொழில்நுட்பவியல் (எந்திரவியல்) இளமாணி தொழில்துறைக் கல்வியில் சான்றிதழ், முதுமாணி கற்கைத்திட்டம், ஆராய்ச்சியில் முதுமாணிப் பட்டங்கள் போன்றவை எந்திரவியல் தொழில்நுட்பப் பீடத்தால் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனினும் இவற்றில் முதலாம், இரண்டாம் கட்டங்களே தற்போது ஆரம்பிக்கப்ப[illegible] என்றும் - தொடர்ந்தும் மாணவ[illegible] எண்ணிக்கையைப் பொறுத்து ஏனைய கற்கைநெறிகளும் ஆரம்பிக்கப்ப[illegible] எனவும் விரைவில் கணினி மற்றும் நூலக வசதிகளும் ஏற்படுத்தித் தருவதாகவும் அவர் தெரிவித்தார். (85)

### பூங்கா மீண்டும் புனரமைப்பு

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்கா மீண்டும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. அண்மையில் நடைபெற்ற மாநகர சபையின் மாதாந்த பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைவாக - இதற்கான மதிப்பீடுகளை தயாரிக்கும் பணிகள் முடிவுற்றுள்ளது. இப்புனரமைப்புப் பணிக்காக மாநகரசபை உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து 6 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (13

# ஏ-9 வீதியில் சர்வதேச தரம் வாய்ந்த தொழில்நுட்பக் கல்லூரி அமையும்

## மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சு ஏற்பாடு

(நமது நிருபர்)

சர்வதேச தரம் வாய்ந்த தொழில நுடபக் கல்லூரி ஒன்று கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ளதாக கொச்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளருடனான சந்திப்பில் பிரதிப் பிராந்தியப் பணிப்பாளர் ந.யோகராஜன் தெரிவித்தார்.

தற்போது அக்கராயனில் இயங்கி வரும் தொழில்நுட்பக் கல்லூரியில் வழங்கப்படும் தொழிற்பயிற்சிச் சான்றிதழ்களுக்கு அரச அங்கீகாரம் கிடைக்கவில்லை எனவும், தகுதியான சான்றிதழை வழங்கக்கூடிய தொழில்நுட்பக் கல்லூரியை கிளிநொச்சியில் அமைக்க வேண்டும் எனவும் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் கேட்டுக் கொண்டதற்கமையவே இந்தத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே- யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்ற போதும்- மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதி மாணவர்களுக்கு தொழில்நுட்ப அறிவினை வழங்கும் நோக்கிலேயே புதிய தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்படவுள்ளது.

ஏ-9 வீதியில்- கிளிநொச்சிக்கும் முறிகண்டிக்கும் இடையில் இந்தத் தொழில்நுட்பக் கல்லூரியை அமைபபதற்காக 10 ஏக்கர் பரப்பளவுடைய காணியை கிளிநொச்சி அரச அதிபர் இராஜநாயகம் ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

சர்வதேச தரம் வாய்ந்ததாக, 525 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்தத் தொழில்நுட்பக் கல்லூரியை அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

2005ஆம் ஆண்டுக்கு முன்னர் சகல கட்டடப் பணிகளும் பூர்த்தி செய்யபபட்டு கல்விச் செயற்பாடுகள் ஆரமபிக்கப்படும் எனவும் அதற்கு முன்னதாக சகல நிதி ஒதுக்கீடுகளும் செய்து கொடுக்கப்படும் எனவும் மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர் காசிம் தமக்கு உறுதியளித்துள்ளதாகவும் யாழ்.பிராந்தியப் பிரதிப் பணிப்பாளர் யோகராஜா மேலும் தெரிவித்தார்.

## தமிழீழ மாவீரர் நாள் - நவம்பர் 27



புயலாக எழுந்த பேராபத்துக்களை எல்லாம், மலையாக நின்று எதிர்கொள்ள இரும்பை ஒத்த மன வுறுதி எமக்குத் தேவைப்பட் டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கால கட்டங்களில் எமக்குப் பக்கபலமாக, மனித மலைகளாக உறுதியோடு நின்ற மாவீரர்களை, நாம் என்றும் மறக்க முடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நின்றன.

வே. பிரபாகரன்
தமிழீழத் தேசியத் தலைவர்

# அதாவுல்லா - ஹக்கீம் தலைமையில் முஸ்லிம் காங்கிரஸ் பிளவு?

### ஒரு பக்கம் சார்கின்றனர் கிழக்கு எம்.பிக்கள்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசினுள், அதாவுல்லா - ரவூப் ஹக்கீம் முறுகல் உச்சக் கட்டத்தை அடைந்து வருவதைத் தொடர்ந்து, முஸ்லிம் காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபடும் நிலை தோன்றியிருப்பதாக அக்கட்சிக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

ரவூப் ஹக்கீமின் தலைமைத்துவத்திற்கு, முஸ்லிம் காங்கிரசினுள் எழுந்துள்ள எதிர்ப்பானது - கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தளவில் மிக வலுவானதாகியுள்ளதாலும், அதாவுல்லா வின் தலைமையின் கீழ் செயற்பட முஸ்லிம் காங்கிரசின் கிழக்கு மாகாண எம்.பி.க்கள் சம்மதித்துள்ளதாலும் இந்தப் பிளவு ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரியவருகின்றது.

# நவீன டிஜிட்டல் வடிவில் சாரதி அனுமதிப் பத்திரம்

## டிசம்பரில் அறிமுகப்படுத்தப்படும்

(மானிப்பாய்)

நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு பதிலாக, புதிய தகவல் தொழில்நுட்ப முறையில் அமைக்கப்பட்ட "டிஜிட்டல் சிம்காட்" சாரதி அனுமதிப்பத்திரம் எதிர்வரும் டிசம்பர் மாத நடுப்பகுதியில் இலங்கையில் அறிமுகம் செய்யப்படும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களதின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இச்சாரதி அனுமதிப் பத்திரத்தை கணினி இயந்திரத்தில் இணைத்தவுடன்- பெயர், விலாசம், அடையாள அட்டை இலக்கம், கையொப்பம், பெருவிரல் அடையாளம் உள்ளிட்ட பல தகவல்களை உள்ளடக்கியதும், 10 தடவைகளுக்கு மேல் வீதிப்போககுவரதது விதிகளை மீறிக் குற்றமிழைத்திருப்பின் சாரதி அனுமதிப்பத்திரம் ரத்தாகும் முறையிலும் இப்புதிய டிஜிட்டல் சிம்காட் சாரதி அனுமதிப் பத்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

குற்றமிழைத்து பொலிஸாரிடம் அகப்பட்டிருந்தால் இச்சாரதி அனுமதிப்பத்திரத்தில் பதிவு செய்யப் பட்டுவிடும். இவ்வாறு 10 குற்றங்கள் புரிந்திருந்தால் அவரது சாரதி அனுமதிப்பத்திரம் ரத்தாகிவிடும்.

தற்போது வழங்கப்படும் சாரதி அனுமதிப்பத்திரத்திற்காக அறவிடப் படும் தொகையைவிட சிறிய தொகையே இதற்கு அறவிடப்படும்.

இப்புதிய டிஜிட்டல் சிம்கார்ட் சாரதி அனுமதிப்பத்திரம் தயாரிக்கும் பொறுப்பு தனியார் நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு புதிதாக விண்ணப்பிப்பவர்கள், கட்டாயமாக மூன்று புகைப் படங்கள் சமர்ப்பிக்க வேண்டும். ஆயினும், புதிய நடைமுறைகளின்படி ஓட்டுநர் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மட்டுமே புகைப்படம் சமர்ப்பிகக வேண்டும். அத்துடன் இப்புகைப் படம் குறிப்பிட்ட தனியார் நிறுவனத்தினரின் டிஜிட்டல் புகைப்படக் கருவி மூலம் படம் பிடிக்கப்பட்டு பெறப் படும். இப்படப்பிடிப்பிலும் செலவு கள் தவிர்க்கப்படும் எனத் தெரிவிக்கப் படுகிறது. (100)

# புலிகளுடன் பேசிய அமைச்சர்கள் மீது பொலிஸ் தலைமையத்தில் புகார் !

(கொழும்பு நிருபர்)

மேல் நீதிமன்றம் தண்டனை விதித்த குற்றவாளி ஒருவருடனும அவரது குழுவுடனும் பேசசுக்களை நடாத்தியதாக - அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம், ஆறுமுகம் தொண்டமான் ஆகியோர் மீது - கொழும்பிலுள்ள பொலிஸ் தலைமையகத்தில் 'சிஹல உறுமய' நேற்று முன்தினம் புகார் ஒன்றைத் தாக்கல் செய்தது.

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரும், அண்மையில் 'சிஹல உறுமய'வில் இணைந்தவருமான எச்.எம்.ஜி.பி.கொடகதெனிய தலைமையில் சென்ற குழு இந்தப் புகாரைத் தாக்கல் செய்தது.

இதே குழு, நாட்டின் நீதியைக் குலைப்பதான குற்றச்சாட்டொன்றை- விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கருணா, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் மீதும் சுமத்தி - மற்றொரு முறைப்பாடொன்றையும் தாக்கல் செய்தது. (01)

# இத்தாலி செல்ல முயன்ற 149 இலங்கையர் எகிப்தில்!

சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்ற 149 இலங்கையர்களை எகிப்திய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அவர்கள் சென்ற படகு எகிப்திய கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது, எகிப்திய அதிகாரிகளால் காப்பாற்றப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை மீள இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாக வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# நெடுந்தீவு விவகாரம் டக்ளஸ்-ரவிராஜ் வாக்குவாதம்

(கொழும்பு)

வன்முறைக்கு எதிரான நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டத்தில் நெடுந்தீவு விவகாரம் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜுக்கும், ஈ.பி.டி.பி செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

கூட்டம் நடைபெற்ற போது-, நெடுந்தீவில் தாம் பன்னிரண்டு வருடங்களாக இருந்து வந்ததாகவும், புலிகளே அங்கு வந்து தமது முகாமைத் தீ வைத்ததாகவும் ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா குற்றஞ்சாட்டினார்.

இதையடுத்து கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினரான ரவிராஜ், இக் கருத்தை மறுத்து, பன்னிரண்டு வருடங்களாக நெடுந்தீவில் ஜனநாயக முறைப்படி ஈ.பி.டி.பி. நடந்து கொள்ளவில்லை. அங்குள்ள மக்களின் நலனில் அக்கறை செலுத்தவில்லை. நெடுந்தீவுக்கு வேறெந்த தமிழ்க் கட்சியும் செல்லமுடியாத நிலைதான் நிலவிவந்தது எனவும் இதனால்தான் நெடுந்தீவு மக்கள் ஈ.பி.டி.பியினர் மீண்டும் வருவதை எதிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

இதனால் கூட்டத்தில் இருவருக்கும் இடையே வாக்குவாதங்கள் ஏற்பட்டதாகவும் தெரியவருகின்றது.

### றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.57 |
| சுபஹ் | 5.12 |
| உதயம் | 6.32 |
| லுஹர் | 12.27 |
| அஸர் | 3.49 |
| ம.்.ரிப் | 6.20 |
| இஷா | 7.33 |

# கல்வி, சுகாதார, மீன்பிடித்துறைகள் வட - கிழக்கு மாகாண சபையிடம்

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் இருந்து மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் பாரப்படுத்தப்பட்ட நிர்வாக நடவடிக்கைகள் யாவும் மீண்டும் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதன்படி கல்வி, சுகாதாரம், மீன்பிடி ஆகிய துறைகளைச் சேர்ந்த நிர்வாக நடவடிக்கைகளே, மத்திய அரசாங்கத்திடமிருந்து இவ்வாறு மாகாண சபையின் நிர்வாகக் கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்டவையாகும். இது சம்பந்தமாக சுற்றறிக்கை ஒன்று வடக்கு, கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளர் எஸ்.தங்கராஜாவினால் சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இச்சுற்று நிருபத்தில் - கல்வி, சுகாதாரம், மீன்பிடி ஆகிய துறைகள் சம்பந்தமான விடயங்கள் யாவும் மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் பாரப்படுத்தப்பட்டுள்ளதால், அத்துறைகள் சார்ந்த விடயங்களை ஒழுங்குபடுத்தித் தேவையான செயற்பாடுகளை திட்டமிட்டுச் செயற்படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது. (100)




வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திசபை, முல்லைத்தீவில் நடத்திய இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவத்தில் விடுதலைப் புலிகளின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், வறுமைக்கோட்டில் உள்ள ஒருவருக்கு மூக்குக் கண்ணாடியை வழங்குவதையும், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய சாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் டாக்டர் க.மயிலேறும் பெருமாளையும் படத்திற் காணலாம்.

# ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக விவகாரம்; ரணிலுடன் நேரடியாக விவாதிக்க தயார்

### ஜே.வி.பி அறிவிப்பு

(கொழும்பு நிருபர்)

ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக மாணவர் குழுக்களிடையே ஏறபட்ட மோதல்களுக்கும் தமக்கும் சம்பந்தமிருப்பதாக அரசதரப்பில் கூறபபடும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தாம் விவாதிக்கத் தயாராக இருப்பதாக ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மாணவர்களை அரசியல் குழு மோதல்களுக்குப் பயன்படுத்துவது குறித்து தாம் ஜே.வி.பியுடன் விவாதிக்கத் தயாராக இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலளிக்கையிலேயே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக விவாதத்துக்கு வருமாறு அரசாங்கத்திடம் இருந்து உத்தியோகபூர்வமான அழைப்பு எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என்றும், என்னென்ன விடயங்களை விவாதிக்கப் போகிறது என அரசாங்கம் தமக்குத் தெரியப்படுத்தினால் இறுதிமுடிவு எடுக்கலாம் என்றும் ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (01)

# நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பியை வெளியேற்றி போர் நிறுத்தச் சூழல் பாதிக்காமல் இருக்க உதவுக

## - பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை -

நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பி உறுப்பினர்களை வெளியேற்றி - போர் நிறுத்த சூழல் பாதிக்கப்படாவண்ணம் பாதுகாக்கவும், மக்களிடம் தோன்றியுள்ள அமைதியற்ற சூழலை தணிகக்குமாறு கோரியும் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரியுள்ளது. நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழர் தாயகத்திலுள்ள இனப் பிரச்சினையைத் தீர்த்து ஒரு நிரந்தர மான தீர்வினை உருவாக்குமுகமாக விடுதலைப் புலிகளாலும் அரசாங்கத்தினாலும் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இதன்படி புலிகள் குடாநாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைசாத்திடப்படுவதற்கு முன்னர் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் கடற்படையோடிணைந்து யாழ். குடாநாட்டில்- குறிப்பாக தீவுப்பகுதிகளில், அது தமது இராச்சியமெனக் கூறி ஒரு சர்வாதிகார ஆட்சியை நடத்தி வந்தார்கள். அவ்வேளை தாம் தாக்கப்படலாம் என்ற அச்சத்தினால் அங்குள்ள மக்கள் அமைதியாக இருந்தார்கள்.

ஆனால் சமாதான சூழ்நிலை ஏற்பட்டபின்னர், தீவுப்பகுதியில் உள்ள மக்கள் ஈ.பி.டி.பி. வன்முறையாளர்களை விரட்டி தமது பகுதியிலிருந்து பாடமொன்றைப் புகட்டினர்.

தற்போது மக்களை பழிவாங்குவதற்காக ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவில் தரையிரங்கியுள்ளனர். பொலிசார் ஈ.பி.டி.பினரிடமிருந்து ஆயுதங்களைப் பறிப்பதற்குப் பதிலாக அவாகளுக்குப் பாதுகாப்பு அளித்து வருகினறனர். அத்துடன் மக்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் பொலிசார் தாக்குதல் நடத்தியுள்ளனர். மூன்று அப்பாவிப் பொது மக்கள் படுகாயப்படுத்தப்பட்டனர்.

ஆனால் மக்கள் தொடர்ந்தும் அகிம்சை முறையில் - தளர்ந்து போகாமல் தமது எதிர்ப்பினைக் காட்டி வருகின்றனர். நெடுந்தீவில் முகாம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஈ.பி.டி.பியினர், ஏற்கனவே கொலைகள் உட்பட ஜனநாயகத்துக்கு விரோதமான நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தக் குற்றச் செயல்களுக்கு நீதித்துறையிடமிருந்தும், பொலிசாரிடமிருந்தும் ஸ்ரீலங்கா, ஜனாதிபதியிடமிருந்தும் ஆதரவினைப் பெற்றிருநதனர். இன்றும் அவ்வாறான ஆதரவைப் பெற முயற்சிக்கின்றனர்.

இலங்கையிலுள்ள நீதிமன்றங்களால் இந்தக் கொலைகாரர்களை தண்டிக்க முடியவில்லை. ஆனால் நாங்கள் இந்தக் கொலைகாரர்களை எமது மணணில் கால் பதிக்க விடக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளோம்.

இத்தகைய சூழலில் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினராகிய நாங்கள், இவ்விடயத்தில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தலையிட்டு, ஈ.பி.டி.பி. உறுப்பினர்களை வெளியேற்றிப் போர் நிறுததச் சூழல் பாதிக்கப்படா வண்ணம் பாதுகாப்பதோடு, மக்களிடம் தோன்றியுள்ள அமைதியற்ற சூழலை தணிக்க உதவுமாறு வேண்டிக்கொளகிறோம், என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடமராட்சி மாவீரர்களின் பெற்றோருக்கு

(வடமராட்சி)

வடமராட்சி பகுதியிலுள்ள மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மாவீரர் தினத்தையொட்டி, துயிலும் இல்லத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்துவதற்கு ஏற்ற வகையில் அன்றையதினம் இரண்டு மணிக்கு இமையாணன் தாமோதரம்பிள்ளை வித்தியாலயத்திற்கு வருமாறு வடமராட்சி அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை - வன்னியிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு பெற்றோர்களை அழைத்துச் செல்வதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவில் தரையிறங்கியதன் பின்னணியில் பேரினவாதச் சக்திகளின் துணை உள்ளது !

## யாழ். பல்கலை ஊழியர் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இரவோடு இரவாக அரச படைகளின் ஆதரவுடன் ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவில் தரையிறக்கப்பட்ட செயலுக்கு, சமாதான முயற்சிகளை சீர்குலைக்க முற்படும் பேரினவாத சக்திகளின் பின்னணி உள்ளது. எனவே நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பியினரை வெளியேற்றுமாறு கோருவதாக கண்காணிப்புக்குழுவிடம் கையளித்துள்ள மகஜரில் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இம்மகஜரில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

இம்மாதம் 16ஆம் திகதி கடற்படை மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புடன் நெடுந்தீவில் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் தரையிறக்கப்பட்டமையைத் தொடர்ந்து அத்தீவின் பதற்றநிலை அச்சமளிப்பதாய் உள்ளது.

1990களில் பிரேமதாசா ஆட்சிக் காலத்தில் ஸ்ரீலங்காவின் இராணுவ செயற்பாடுகளுக்கு துணைபுரியும் பொருட்டே ஈ.பி.டி.பியினர் தீவகத்தில் தரையிறக்கப்பட்டனர். அன்று தொட்டு இன்றுவரை இவர்கள் அரசியல் கட்சி என்ற போர்வையில் ஆயுதக்குழுவாகவே தொழிற்படுகின்றனர். பொதுசன முன்னணி ஆட்சிக் காலத்தில் தீவகத்தில் இவர்களின் அடாவடித்தனங்கள் மேலும் அதிகரித்தன.

இவர்களை வெளியேற்றத் தகுந்தவொரு சந்தர்ப்பத்துக்காக காத்திருந்த நெடுந்தீவு மக்கள் தம் இயல்பு வாழ்க்கை மீளத் திரும்புவதற்கேற்ற புறச்சூழல் உருவாகி வரும் நிலையில் அத்தகைய உருவாக்கத்துக்கு குந்தகமான இந்த ஆயுதக் குழுவினரை தமது பிரதேசத்தை விட்டு விரட்டியடித்தனர்.

தற்போது மக்களின் விருப்பத்துக்கு மாறாக இரவோடு இரவாக ஆயுதங்கள் சகிதம் அரச படைகளின் துணையோடு ஈ.பி.டி.பியினரை மீண்டும் நெடுந்தீவில் தரையிறங்கியுள்ள செயலுக்கு சமாதான முயற்சிகளை குலைக்க விரும்பும் பேரினவாதிகளின் பின்னணி உண்டு என்பது வெளிப்படையானது.

இச்செயல் நெடுந்தீவின் இயல்பு நிலையை உடனடியாகவே பாதித்துள்ளது. பொலிஸாரின் தாக்குதலில் மூன்று பொதுமக்கள் காயமடைந்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. தீவகத்தின் ஏனைய பகுதிகளிலும் பதற்றமான சூழல் உருவாகியுள்ளது. மக்கள் கொந்தளிப்பான நிலையிலுள்ளனர்.

இவையெல்லாம் இந்நாட்டில் பல ஆண்டுகளுக்கு பிறகு உருவாகியுள்ள சமாதான நல்லெண்ணச் சூழலுக்குப் பாரிய சேதத்தை உருவாக்கக்கூடியவை. ஈ.பி.டி.பியினரை தரையிறக்கக் காரணமானவர்களின் நோக்கமும் அதுவேயாகும்.

தயவு செய்து இவ்விடயத்தில் தாங்கள் உடனடியாக தலையிட்டு ஈ.பி.டி.பியினரை அவர்களின் ஆயுதம் சகிதம் உடனடியாக அவ்விடத்தை விட்டு வெளியேற்றுமாறு சமாதானத்தின் பேரில் எமக்குள்ள அக்கறையின் நிமித்தம் பணிவாக வேண்டுகிறோம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சமாதான முயற்சிகளை குழப்புவதற்கு சதி முயற்சி!

## வலி.கிழக்கு தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம்

மக்களின் ஜனநாயக ரீதியான போராட்டங்களை ஆயுதரீதியில் அடக்க முற்பட்டால் நாடு தழுவிய வெகுஜனப் போராட்டங்களை நடத்த வேண்டிய நிலை உருவாகுமென வலி.கிழக்கு தனியார் நிறுவனங்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் - ஜனநாயக வழிக்கு திரும்பியுள்ளோம் எனக் கூறும் ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவு மக்களின் ஜனநாயக வழியிலான அகிம்சைப் போராட்டத்திற்கு மதிப்பளித்து அவர்களின் கோரிக்கையை ஏற்று நெடுந்தீவிலிருந்து வெளியேறுவது ஜனநாயகத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள பற்றை வெளிப்படுத்தும் செயலாகும்.

இதனை மீறி ஆயுத ரீதியில் படையினரின் அனுசரணையுடன் நெடுந்தீவு மக்களை அடக்க நினைப்பது ஜனநாயக விரோதச் செயலாகும். ஆயுத ரீதியில் மக்களை அடக்க முற்பட்டால் நாடு தழுவிய வெகுஜன போராட்டங்கள் முன்னெடுக்க வேண்டிய கட்டாயத் தேவை ஏற்படும். இவ் வெகுஜனப் போராட்டத்திற்கு மக்களை தூண்டியது ஈ.பி.டி.பியினரையே சாரும். ஆகவே ஜனநாயக மரபிற்கு அமைவாக பொதுமக்களின் ஏகோபித்த கோரிக்கையை ஏற்று நெடுந்தீவை விட்டு வெளியேறுவது கனிந்து வரும் சமாதானத்திற்கு உகந்த செயலாகும்.

ஆகவே சமாதானத்தைக் குழப்பும் சதி முயற்சியில் இருந்து விலகி உண்மையான ஜனநாயக வழிமுறையை கடைப்பிடிப்பதன் மூலம் எமது நாடு தழுவிய போராட்டத்தை தவிர்க்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெடுந்தீவுச் சம்பவங்கள் மக்களிடையே அச்சத்தையும், திகிலையும் ஏற்படுத்துகின்றன !

## யாழ்.மாவட்ட தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை அறிக்கை

புரிந்துணர்வு அடிப்படையில் சமாதானத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் மிக முன்னேற்றகரமான முறையில் நடைபெற்றுக் கொண்டு இருக்கும்வேளையில் நெடுந்தீவில் நடைபெறும் சம்பவங்கள் மக்களிடையே அச்சத்தினையும், திகிலையும் ஏற்படுத்துகின்றன.

இவ்வாறு - யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை, நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர் முகாம் அமைக்கச் சென்ற போது பொதுமக்களுக்கும் ஈ.பி.டி.பி.யினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல்நிலை தொடர்பாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிப்பதாவது:-

மக்கள் சமாதான முயற்சிகளூடாக தம்முடைய இயல்பு வாழ்வு திரும்பிவிடுமென்றும் மாணவர்கள் தம்முடைய கல்வி இடையூறின்றி தொடரப்போகின்றது என்றும் எண்ணுகின்ற வேளையில், ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவுப் பகுதியில் வந்து இறங்கியதும், அதைத்தொடர்ந்து ஏற்பட்டு வரும் நிகழ்வுகளும் சமாதான முயற்சிகளைக் குழப்பிவிடுமோ என ஐயப்பட வைக்கின்றன. நெடுந்தீவு மக்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதை தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேர்வை வன்மையாகக் கண்டிக்கின்றது என்றும் கூறப்பட்டுள்ளது.


## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்.



பெயர் :க.ஜதுஸ்வர்
முகவரி: 2A செல்லர் வீதி,
யாழ்ப்பாணம்.

இரண்டாவது அகவையில்.



பெயர் : ந.பிரியங்கன்
முகவரி: மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

மூன்றாவது அகவையில்.



பெயர் :கு.சங்கீர்த்தன்
முகவரி: வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

ஆறாவது அகவையில்.



பெயர் : யோ.தர்ஷிகா
முகவரி: 9 மாட்டின் ஒழுங்கை ,
யாழ்ப்பாணம்.

எட்டாவது அகவையில்.



பெயர் : யோ.பிரியங்கா
முகவரி: அசோக் இல்லம் ,
கட்டைப்பிராய்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

குறிப்பு:-இம்மாத முடிவுவரை மட்டும் ஐந்து கூப்பன்களை அனுப்பலாம்.

------------------------------
பெற்றார் ஒப்பம்

**கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (சாதாரணதர)**
**மாதிரி வினாத்தாள் - 2002**



# மாணவர் மலர்

## தமிழ்மொழியும் இலக்கியமும் - III

### பகுதி - I

**1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கும் விடைதருக?**

1. பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அ) "என் வீரமே காணவேண்டில் துன்றுநின் சேனையோடும் வருக"
1) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2) யாருக்குக் கூறப்பட்டது?
3) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
4) இக்கூற்று இடம்பெறும் நூலைப் பாடியவர் யார்?

ஆ) "ஐயகோ! இது என்ன அபத்தம். என் கையிற் கிடந்த கணையாழியைக் காணவில்லையே".
1) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2) யாருக்குக் கூறப்பட்டது?
3) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
4) கணையாழி எங்கே தொலைந்தது?



இ) "இன்று இவண் வந்த நீயார்?
எய்திய கருமம் என்ன?"
1) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2) யாருக்குக் கூறப்பட்டது?
3) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
4) 'இவண்' என்பதன் பொருள் யாது?

ஈ) "கிழவியட மகன்ர விலாசமென்ன?
அந்தக் காயிதைக் காணயில்லை நான் தந்தியடிச்சன் என்று சொல்லீற்றன்"
1) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2) யாருக்குக் கூறப்பட்டது?
3) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
4) 'கிழவி' என்று யாரைக் கூறியுள்ளனர்?

உ) "யாரை நீ யவலிக்கின்றனை பெருகுமித்துயருனக்குற்ற பெற்றியென்"
1) இக்கூற்று இடம்பெறும் நூல் எது?
2) 'பெற்றி' என்பதன் பொருள் யாது?
3) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
4) யாருக்குக் கூறப்பட்டது? (5x4 = 20 புள்ளிகள்)

2. பின்வரும் செய்யுட்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி, அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

அ) மற்ற வன் செயல் இன்ன தன்மைய தாக **மாலயனான அக்**
**கொற்ற ஏனமும் அன்னமுந் தெரியாத கொள்கைய ராயினார்**
பெற்ற ஊர்வதும் இன்றி நீடிய பேதையாளுடன் இன்றி ஓர்
நற்ற வத்தவர் வேட மேகொடு ஞாலம் உய்திட நண்ணினார்

ஆ) ஜென்மநாட் டொடங்கியான் செய்த தீவினை
என்முது குளுக்குற விறுத்த **தாற்புலைக் கன்மிகள்**
**குழுமுதிக் கடற்கி டங்கிடை** அம்மையி லமிழ்த்து மென் றஞ்சு கின்றனன்.

இ) நின்றவன் தன்னை அன்னான்
**நெருப்(பு) எழ நிமிரப் பார்த்(து) இங்கு**
இன்(று) இவண் வந்த நீ யார்?
எய்திய கருமம் என்னை?
கொன்று இவர் தின்னா முன்னம்
கூறுதி தெரிய" என்றான்;
வன்திறல் வாலிசேயும்
வாள் எயிறு இலங்க நக்கான்.

ஈ) எறிந்திடலும் உயர் ஏங்கி **வேனில்**
**இடி விழுந்தால் படிமிசையே அடிசாய்ந்து ஆடி**
**முறிந்து விழும்மரம் போல்** சென்று அடிமேல் வீழ்ந்து
மொழி குழறி விழிஅருவி சொரிய, வல்லி
"அறிந்துமிலன் இவ்வூரில் வழங்கும் நீதி;
அருவிணயேன் ஆருமிலி; அறவும் பாவி
மறிந்த மகன் தனைச்சுட நான் வந்தேன், ஐயா!
வறியேற்குப் பொருள் உளவோ வழங்க" என்றாள்.

உ) **செற்செவி யுணர்ந்து புந்தி தெளிவிலன** படுபா டுன்னா
தற்செறி மனத்திற் கொண்ட வயரத்தா லறையு நின்றன்
நற்செறி யிறைவ னாவித் தாவியென் சரமே யுண்ட
தீற்செறிந் துற்றேன் பின்னர் சரதமீதென்று சொற்றான்.
(5x4 = 20 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ) இளையான்குடிமாற நாயனார் புராணத்தில் இருளின் தன்மை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது.?
ஆ) குடிசையைச் சுற்றியிருந்த அந்தத் தட்டுவேலிக்குள்தான் தனது அறுபது வருட வாழ்க்கையையும் கழித்திருக்கிறாள் "சகீனா" - என்ற கூற்றின் மூலம் உணர்த்தப்படுவது யாது?
இ) நமுறூது படையில் இடம்பெற்ற ஆண்களும் பெண்களும் எவ்வாறு தோற்றமளித்தனர்?
(15 புள்ளிகள்)

4. எவையேனும் இரண்டிற்கு விடை தருக.

அ) "செவத்தியார் கோயிலடி வாசிகளுக்கு அந்தோக்கிழவி ஒரு ஸ்தாபனம்" என்று கூறக் காரணம்.

ஆ) இராவணன் போரிட வரமாட்டான் என்று என்ன காரணங்களைக் காட்டி இராமன் கூறியதாக அங்கதன் கூறினான்.

இ) மலையக மக்கள் பிரச்சினைகள் "முடியாத கதைகள்" என்பதை ஆசிரியர் எவ்வாறு குறிப்பாக உணர்த்துகிறார்.
(15 புள்ளிகள்)

5. அ) மகனை இழந்த சந்திரமதியின் தவிப்பினை விளக்குக.

ஆ) மகனுடலைத் தகனம் செய்ய முற்பட்ட சந்திரமதியைப் புலையன் எவ்வாறு தடுத்தான்.
(10 புள்ளிகள்)

6. அ) மாதவியும் மணிமேகலையும் ஏன் இந்திரவிழாவிற்கு செல்லவில்லை.

ஆ) உதயகுமாரனைக் கொன்றவர் யார்? ஏன் கொன்றார்?
(10 புள்ளிகள்)

7. அ) கதீஜ நாயகியைப் புகழ்ந்துகூற உமறுப்புலவர் கையாண்ட உவமைத் தொடர்கள் எவை?

ஆ) கதீஜா நாயகி நாயகத்திற்கு அருகில் வீற்றிருந்தமை எவ்வாறு காட்டப்படுகிறது.
(10 புள்ளிகள்)

அமிர்தலிங்கம் பௌநந்தி
கரவெட்டி, வடமராட்சி.

## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை - 2002





(மாதிரி வினாத்தாள்)

## விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் -II

I) "இயற்கை வளங்கள் பூரண அளவில் பயன்படுத்தப்படல் வேண்டும். அவற்றை ஈடுசெய்யும் நடைமுறைகளையும் மேற்கொள்ள வேண்டும்."

1. பின்வரும் கைத்தொழில்களுக்குரிய பிரதான மூலப்பொருட்களைத் தருக.
a) கறியுப்பு b) சீமெந்து c) சவர்க்காரம் d) பீங்கான்

2. a) சுண்ணாம்புக்கல்லின் வெப்பத் தாக்க சமன்பாட்டைக் குறிப்பிடுக.
b) 5.6 Kg நீறாத சுண்ணாம்பை பெறத் தேவையான சுண்ணாம்புக்கல்லின் திணிவு யாது?

3. a) கேத்தலின் அடியில் படிந்துள்ள வெள்ளைப் படிவு, கல்சியம் சேர்வை என்பதை எவ்வாறு உறுதிப்படுத்துவீர்?
b) மனித என்பிலுள்ள கல்சியம், பொஸ்பரசுச் சேர்வை எது?

4. a) வளிமண்டலத்திலிருந்து நைதரசனை மண்ணில் நிலைநாட்டும் முறைகள் 2 தருக.
b) வளிமண்டல நைதரசன் எவ்வடிவத்தில் தாவரங்களில் அகத்துறுஞ்சப்படும்?

5. a) நைதரசன் வளமாக்கி 2 தருக.
b) இராசயன வளமாக்கிகளைத் தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் 2 தருக.

II)
1. குவிவு வில்லையில் பின்வரும் நிலைகளில் பொருள் உள்ளபோது விம்பம் உருவாகும் விதத்தை கதிர்ப்படம் மூலம் காட்டுக.
a) பொருள் குவியத்தினுள் b) f இற்கும் c இற்கும் இடையில்

2. குவிவுவில்லையின் குவியத்தூரத்தை எவ்வாறு அறியலாம்?

3. அவதிக்கோணம், முழுஉட்தெறிப்பு என்பவற்றை வரையறுக்க.

4. தளவாடியின் முன் ஒரு புள்ளியில் பொருள் வைக்கப்பட்டபோது அதன் விம்பம் உருவாகும் விதத்தை கதிர்ப்படம் வரைந்து காட்டுக.

5. a) தளவாடியில் உருவாகும் விம்ப இயல்புகள் தருக.
b) தளவாடி பயன்படுத்தப்படும் ஒளியியற் கருவிகள் 2 தருக?

III) "அருகிவரும் எரிபொருளினால் ஏற்படக்கூடிய பிரச்சினையை உயிர்வாயுவைப் பயன்படுத்துவதன் மூலம் தீர்க்கமுடியும்."

1. உயிர் வாயுவின் பெயரையும் சூத்திரத்தையும் தருக?

2. இதிலுள்ள சக்தியின் ஆரம்ப முதல் எது?

6ஆம் பக்கம் பார்க்க

3. இது எவ்வகைச்சக்தியாக உயிர் வாயுவில் சேமிக்கப்பட்டுள்ளது?

4. உயிர் வாயுவுக்குரிய அடிப்படை மூலப்பொருள் எது?

5. இவ்வாயுவின் பூரணதகனத்திற்கான தாக்கச் சமன்பாட்டைத்தருக?

6 320g உயிர்வாயு தகனமடைவதால் உருவாகும்
a)நீரினதும் b)காபனீரொட்சைட்டினதும் திணிவுகளையும் கணிக்க?

7) எரிபொருட்களின் எரிபற்று நிலை என்றால் என்ன?

8) வெவ்வேறு எரிபொருட்களின் எரிபற்று நிலையை எவ்வாறு அறிவீர்?

**IV)** பின்வருவனவற்றிற்கு விஞ்ஞான விளக்கம் தருக?

1) நீரின் அடியிலுள்ள வளிக்குமிழ் மேலே வரும் போது கனவளவில் பெரிதாகும்.

2) விளைநிலம் ஒன்றிற்கு பசளையிட வேண்டியது அவசியம். ஆனால், இயற்கைச் சூழற்தொகுதிக்கு அவசியமில்லை.

3) அடுப்பை வாயினால் ஊதி எரியச் செய்கிறோம்.

4) ஒலிப்பதிவு நாடாக்களை வலிமைமிக்க காந்தத்திற்கு அருகாமையில் வைத்தல் நன்று அல்ல.

5) வியர்க்கும்போது காற்றாடியின்கீழ் இருந்தால் சௌகரியமானது.

6) தரைக்காற்று முன்னிரவில் நடைபெறும்.

**V)**




கல்லொன்று வளியில் 40 கிராம், நீரில் 24 கிராம், என்பதனை விற்றராசு காட்டுகிறது.

1) கல் நீரினுள் இருக்கும் போது நிறைக்குறைவு காட்டுவதன் காரணம் யாது?

2) நீ கூறும் காரணத்தை முதன்முதல் எடுத்துக்காட்டிய விஞ்ஞானி யார்?

3) 40 கிராம் கல் இடம்பெயர்த்த நீரின் திணிவு யாதாக இருக்கும்?

4) கல்லின் சாரடர்த்தியைக் கணிக்க?

5) நீரின் அடர்த்தி 1000kg $m^{-3}$ எனின், கல்லின் அடர்த்தியைக் காண்க?

6) மிதத்தல் விதியைக் கூறுக?

**VI)** எரிபொருள் தட்டுப்பாடான இவ்வேளையில் மரத்தூள் அடுப்பு பிரபல்யம் அடைந்துள்ளது. மரத்தூள் அடுப்பொன்றை படம் காட்டுகிறது.




1) மரத்தூள் எரிவதற்கு தேவையான வளி தகரத்தினுள் எப்பகுதியினூடாகச் செல்கிறது?

2) மரத்தூள் எரியும்போது வெளிவிடப்படும் பதார்த்தங்கள் இரண்டு தருக?

3) சுவாலை நீலநிறமாயின் அது எவ்வகையான தகனம் ஆகும்?

4) மரத்தூள் முற்றாக எரிந்து முடியும்வரை தகரம் மிகச்சிறு அளவில் வெப்பமடைகின்றது.
a) இதற்குக் காரணம் யாது?
b) இந்த இயல்பு அடுப்பின் திறனை எவ்வாறு அதிகரிக்க செய்கிறது என்பதை விளக்குக?

5) இவ்வடுப்பிலே மரத்தூளுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய வேறு ஒரு பொருளின் பெயரைத் தருக?

6) இவ்வடுப்பில் உள்ள அனுகூலம் ஒன்றும் பிரதிகூலம் ஒன்றும் தருக?

7) இவ்வடுப்பைப் பயன்படுத்தி உருளைக்கிழங்கை அவிக்க 30 நிமிடம் எடுத்தது. அதே அடுப்பில் 2kg நீரின் வெப்பநிலையை $30^oc$ யில் இருந்து $100^oc$ யிற்கு உயர்த்த 20 நிமிடங்கள் எடுத்தது. (நீரின் தன்வெப்பக் கொள்ளளவு 4200 $Jkg^{-1}\,^oc$) உருளைக்கிழங்கை அவிக்கத் தேவையான வெப்பசக்தியைக் கணிக்க?
(நீர் கொதிக்க வைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பாத்திரத்தினால் உறிஞ்சப்பட்ட வெப்பத்தையும் ஏனைய வெப்ப இழப்புக்களையும் புறக்கணிக்க, அடுப்பில் இருந்து வெப்பம் சீராகப் பெறப்பட்டதெனக் கொள்க)

**VII)**




1) A,B,C,D,E,F என்பன குறிக்கும் அமைப்புக்களை பெயரிடுக?

2) ஒலிபரப்பு நிலையங்களில் இருந்து வரும் மட்டிசைக்கப்பட்ட வானொலி அலைகளில், எவ்விரு அலைகள் சேர்ந்திருக்கும்.

3) வானொலி அலைகளில் உள்ள எந்த அலை வேறாக்கி எடுக்கப்படுகிறது?

4) மின்சக்தியை ஒளிச்சக்தியாக மாற்றும் கருவி யாது?

5) மாறும் மின்னோட்டச் சைகையை விரியலாக்கப் பயன்படும் கருவி எது?

6) ஆடலோட்டத்தை நேரோட்டமாக மாற்றும் கருவி எது?

7) தரப்பட்ட சுற்றில் அமைப்பு A பொருத்தப்பட்டிருப்பதன் பயன்பாடு யாது?

**VIII)** விளையாட்டுக்கார் ஒன்றின் இயக்கத்திற்கான வேகநேர வரைபு தரப்பட்டுள்ளது




அ)
1) வேகம் என்பதை வரையறுக்க?
2) வாகனத்தின் ஆரம்ப வேகம் யாது?
3) AB இற்கிடையில் இயக்கம் எத்தகையது?
4) AB இல் ஆர்முடுகல் யாது?
5) AB இல் வாகனம் எவ்வளவு தூரம் இயங்கியுள்ளது?

ஆ) 1) வாகனம் இயங்கிய மொத்தத் தூரம் யாது?
2) வாகனத்தின் சராசரி கதி யாது?
3) வாகனத்தின் அதியுயர் வேகத்தை km/h இல் தருக?
4) வாகனத்தின் திணிவு 100g எனின், இறுதிப் 10 செக்கன்களில் அதிற் செயற்பட்ட விளையுள் விசை யாது?

**IX)**

1) மின்உற்பத்தி நிலையங்களில் மின்னைப் பிறப்பிக்கும் சாதனம் எது?

2) சைக்கிள் டைனமோவில் பிறப்பிக்கப்படும் மின்னியக்க விசையை நேரத்திற்கெதிராக வரைந்து காட்டுக?

3) சைக்கிளின் மின் விளக்கு 12V,25W எனக் குறிக்கப்பட்டது. இம் மின்விளக்கு எடுக்கும் மின்னோட்டம் யாது?

4) இம்மின்குமிழ் இழையின் தடை யாது?

5) சைக்கிள் டைனமோவில் இருந்து பெறும் மின்னை நேரோட்டமாக மாற்ற 4 இருவாயியைப் பயன்படுத்தி எவ்வாறு இணைப்புச் செய்வீர் என்பதை சுற்று வரிப்படம் மூலம் காட்டுக?

6) வீட்டு மின்சுற்றில் மின்குமிழ்கள் இணைக்கும் முறை யாது? இவ்வாறு இணைப்பதால் ஏற்படும் நன்மை யாது?

**X)** படத்தில் உள்ளவாறு தாவரம் ஒன்றின் ஒரே முதிர்ச்சியும் பருமனும் உடைய நான்கு இலைகள் பெறப்பட்டு பின்வரும் மாற்றங்களுக்கு உட்படுத்தப்படும்.




1) A ற்கு எதுவும் பூசப்படவில்லை.
2) B ற்கு இரு புறமும் வசலீன் பூசப்பட்டுள்ளது.
3) C ற்கு மேற்புற மேற்றோலிற்கு மாத்திரம் வசலீன் பூசப்பட்டுள்ளது.
4) D ற்கு கீழ்ப்புற மேற்றோலிற்கு மாத்திரம் வசலீன் பூசப்பட்டுள்ளது.

1) இப்பரிசோதனையின் நோக்கம் யாது?
2) இலை Dயில் எவ்வகையான மாற்றத்தை அவதானிப்பீர்? காரணம் தருக?
3) இலை Cயில் எவ்வகையான மாற்றத்தை அவதானிப்பீர்? காரணம் தருக?
4) இலை Bயில் எவ்வகையான மாற்றத்தை அவதானிப்பீர்? காரணம் தருக?
5) இலை Aயில் எவ்வகையான மாற்றத்தை அவதானிப்பீர்? காரணம் தருக?
6) இவ் அவதானிப்புக்களில் இருந்து நீர் எம்முடிவிற்கு வருவீர்?
7) ஆவியுயிர்ப்பு என்றால் என்ன?
8) ஆவியுயிர்ப்பைப் பாதிக்கும் காரணிகள் எவை?

சி.பாலச்சந்திரன்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

-தமிழ்ப் பழமொழி

# நமது நோக்கு

## கசப்பும் எதிர்ப்பும் !

நெடுந்தீவில் கடந்த சில தினங்களாக நடைபெற்றுவரும் சம்பவங்கள், மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் மீதான வெறுப்புணர்வையும், எதிர்ப்பையும் மக்கள் தயங்காது காட்டி நிற்கும் துணிச்சலை வெளிப்படுத்தி நிற்கின்றன.

தீவகப் பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோது ஈ.பி.டி.பியினர் அங்குள்ள மக்களை அடக்கியாண்ட விதமும், மக்கள் மீதான அவர்களது அழுத்தங்களுமே, இன்று எதுவரினும் தளரோம் எனத் துணிந்துநின்று போராடும் வேகத்தை மக்களிடம் தோற்றுவித்திருக்கின்றது.

ஆயுதங்கள் கைவசம் இருக்கின்றன, படையினர் ஆதரவும், அரசியல் ஆசியும் எமக்கு அள்ளித் தரப்பட்டிருக்கின்றது என்ற அதிகார பலத்தோடு தீவக மக்கள் மீது பிரயோகிக்கப்பட்ட ஆட்சியதிகாரம் இன்று ஜனநாயகச் சூழலில் செல்லாக்காசாகி விட்டிருப்பதையும்,

மக்களுக்கான அரசியல் என்பதை விடுத்து, அதிகார பலத்தை நிரூபிப்பதற்கான அரசியலைக் கைக்கொண்டதனால் ஏற்பட்ட கசப்புணர்வையும் தீவக மக்களிடம் இன்று காணமுடிகின்றது.

ஈ.பி.டி.பியினர் தாம் செய்த செயல்களுக்கான பிரதிபலனையே இன்று மக்கள் எதிர்ப்பின் மூலம் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

நெடுந்தீவில் - மீண்டும் ஈ.பி.டி.பி யினர் காலடி எடுத்து வைப்பதையோ அங்கு முகாம் அமைப்பதையோ அனுமதிக்கமுடியாதென- ஒன்று திரண்டு நாட்கணக்கில் நகராது நின்று போராடி எதிர்க்குமளவிற்கு, துப்பாக்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டபோதும் குண்டாந்தடிப் பிரயோகம் செய்யப்பட்டபோதும்- கடற்படை, பொலிஸ் என நூற்றுக்கணக்கான படையினர் திரண்டு மிரட்டிய போதும்- தமிழர் படுகொலைகளை நினைவூட்டி அவர்கள் பயமுறுத்தியபோதும் கோபாவேசத்தோடு மக்கள் தளர்ந்துவிடாது போராடுவதற்கு-

ஈ.பி.டி.பியினரின் செயற்பாடுகளே காரணமாக அமைந்திருக்கின்றன.

மக்கள் அவர்களை அரசியற் கட்சியாகப் பார்க்காது படையினரோடு இயங்கும் ஆயுதக்குழுவாகவே பார்ப்பதும் அதனாலுண்டான எதிர்ப்பலைகளும் ஈ.பி.டி.பியின் தவறான செல்வழியின் வெளிப்பாடுகளே.

மக்களது இத்தகைய வெறுப்பையும், எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொண்டபோதும் மீண்டும் மீண்டும் தமது தவறான செல்வழியை உறுதிப்படுத்துவதாகவே ஈ.பி.டி.பி. நடந்து கொள்வதை நெடுந்தீவுச் சம்பவங்களில் காணமுடிகின்றது.

அரசியற்கட்சியாக மக்களை அணுகாது, ஆயுதக் குழுவாகவே அங்கு சென்று தரையிறங்கி படையினர் துணையோடு மக்களைத் தாக்கியும், மிரட்டியும் கொடுஞ்செயல்கள் புரிவதும் -

கத்திகள், வாள்கள், பொல்லுகள் கண்ணீர்ப் புகைக் குண்டுகளுடன் - வன்முறைகளினூடாக மக்களைப் பணிய வைக்கலாமென முயற்சிப்பதும் கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை மட்டுமல்ல, மக்களின் அடிப்படை மனித உரிமைகளையே அப்பட்டமாகப் பாதிப்பவையுமாகும்.

போர்ச்சூழல் தணிந்து - யுத்த நிறுத்தம் நிலவி, மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடத் தொடங்கியிருக்கும் நேரத்தில் இத்தகைய அடாவடித்தனங்களை அரங்கேற்றுவதன் மூலம் தம்மைத்தாமே மக்களிடமிருந்து தனிமைப்படுத்தும் முயற்சியில் ஈ.பி.டி.பி. இறங்கியிருப்பதாகவே கருதமுடியும்.

அதேவேளை - போர்நிறுத்த உடன்பாடுகளை பகிரங்கமாக மீறுவதன் மூலம் சமாதானத்தினையும் அமைதி முயற்சிகளையும் ஈ.பி.டி.பி. அலட்சியப்படுத்தியிருப்பதும் இதன் மூலம் வெளிப்பாடாகியிருக்கிறது.

# அமைதிச்சூழலைத் தக்கவைக்க கண்காணிப்புக்குழு தலையிட வேண்டும்

## மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை

போர்நிறுத்த உடன்பாட்டில் ஏற்பட்டுள்ள தீடீர் பாதிப்பில் இருந்து பாதுகாக்கவும் - அமைதிச்சூழலை தக்கவைத்துக் கொள்ளவும் தங்களது தலையீடு மிக முக்கியமானது என யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கையளித்துள்ள மகஜரில் கூறப்பட்டுள்ளது. அம்மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:- தற்போது நெடுந்தீவில் ஏற்பட்டுள்ள நிலமையானது ஆயுதங்கள் வைத்திருப்பது சம்பந்தமான - யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரிவு 1.8 யினை மீறுவதாக உள்ளது. போர் நிறுத்த உடன்பாட்டின் செயற்பாடுகள் எக்கணமும் அழிக்கப்படலாம் என்ற அச்சத்தில்- நெடுந்தீவிலுள்ள மக்கள் உள்ளனர்.

இதனால், கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் தமக்கு எதிரானவர்கள், தமது பகுதியில் இருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும் என கோரிவருகின்றனர். எனவே மனிதாபிமான அடிப்படையில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் இணைந்து இந்தப்பிரச்சினைகளை தீர்ப்பீர்கள் என யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் நம்புகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு - செங்கலடியில்

# கிளைமோர் குண்டுகளுடன் கைதான இரு இளைஞர்கள் விளக்கமறியலில்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - செங்கலடியில் வைத்துக் கிளைமோர்கள், கைக்குண்டுகளுடன் கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களையும் வாழைச்சேனை நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

செங்கலடியில் வைத்து நேற்று முன்தினம் காலை இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

செங்கல டியைச் சேர்ந்த தர்மரட்ணம் வனராஜா, உலகசேகரம் வடிவேல் ஆகியோரே கிளைமோர்கள், கைக்குண்டுகளுடன் கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களை நேற்று வாழைச்சேனை நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர் செய்தபோது டிசம்பர் 03 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் அப்துல் கபூர் உத்தரவிட்டார்.

## ஒரே வழக்கில் ஏழு பேருக்கு மரண தண்டனைத் தீர்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் அண்மைக்கால வரலாற்றில் ஒரே வழக்கில ஏழு பேருக்கு மரணதண்டனை தீர்ப்பாக வழங்கப்பட்டுள்ளது.

மினுவாங்கொட பகுதியில், 1993 இல் மூன்று பேரை வெட்டிக கொலை செய்தாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஏழு பேருக்கு நீர்கொழும்பு நீதிவான் திஸ்ஸ ஏக்கநாயக்க இத்தீர்ப்பை அளித்தார்.

இந்த வழக்கு - கடந்த ஒன்பது வருடங்களாக, நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் நடந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## விரைவில் யாழ்ப்பாணத்துக்கு வரும் மகிந்த - தினேஷ்

(கொழும்பு)

யாழ்ப்பாண நிலைமைகளை நேரில் அறிந்து கொள்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, மக்கள் ஐக்கிய முன்ணனித் தலைவர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் விரைவில் யாழ். வரவுள்ளனர்.

இவர்களின் யாழ்ப்பாண விஜயம் தொடர்பான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் பொ.ஐ.முன்னணி வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

ஆனால், இவ் விஜயம் எப்போது இடம்பெறும் எனத் தெரியவரவில்லை

# "மாணவ சாகித்திய விழா - 2002" பேராதனைப் பல்கலைக்கழகத்தில்

பேராதனைப் பல்கலைக்கழக சாகித்திய விழாக் குழுவும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இணைந்து 9 வது முறையாக ஏற்பாடு செய்துள்ள 'மாணவ சாகித்திய விழா - 2002' நவம்பர் 23, 24 ஆம் திகதிகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேசிய மட்டத்தில் மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட கவிதை, பாடல் இயற்றுதல், சிறுகதை ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 24 ஆம் திகதி இடம்பெறும். போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் பின்வருமாறு:-

**உயர் கல்வி மட்டம்**

பாடல் இயற்றுதல்: செ.சுதர்சன் (பேராதனைப் பல்கலைக் கழகம்), ப.தர்மினி (யாழ். பல்கலைக்கழகம்), சி.இராஜலஷ்மி (பேராதனைப் பல்கலைக்கழகம்)

கவிதை: எம்.ஐ.நகீர் ஹம்னா (பேராதனைப் பல்கலைக் கழகம்), செ.சுதர்சன் (பேராதனைப் பல்கலைக்கழகம்), நா.சிவகௌரி (யாழ். பல்கலைக்கழகம்), ப.தர்மினி (யாழ். பல்கலைக கழகம்), எம்.ஜே.எம்.இர்பான் (லீமகஷா கொட்டுவ)

சிறுகதை: ஆ.நித்திலவர்ணன் (யாழ். பல்கலைக்கழகம்), இல்காம் யுனைதீன் (பேராதனை பல்கலைக்கழகம்), செ.சுதர்சன் (பேராதனை பல்கலைக்கழகம்), ப.தங்கேஸ் (பேராதனை பல்கலைக்கழகம்), ப.தர்மினி (யாழ். பல்கலைக்கழகம்), ஆ.அருள்மொழி (யாழ். பல்கலைக்கழகம்), ந.உமைபாலன் (பலாங்கொடை)

பாடசாலை மட்ட மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இருந்து போட்டிகளில் பங்கு பற்றியோரில் - கவிதைப் போட்டியில் எஸ்.அஜந்தா (யாழ். நயினாதீவு கணேசா கனிஷ்ட மகாவித்தியாலயம்) , பாடல் இயற்றுதல் போட்டியில் சி.சுகன்ஜா (கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி) ஆகியோரும் வெற்றியீட்டியுள்ளனர்.

பரிசில்களுக்குத் தெரிவான அனைத்து வெற்றியாளர்களையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும்படி விழாக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

~~(103)~~

## யால சரணாலய வருமானம் மும்மடங்காக அதிகரிப்பு

(கொழும்பு)

யால - தேசிய பூங்காவில் வருமானம் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. யால தேசிய பூங்கா மீண்டும் திறக்கப்பட்டதையடுத்து இங்கு வரும் உல்லாசப் பயணிகளின் தொகை அதிகரித்துள்ளது.

யால பூங்காவுக்கு- உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பெருமளவில் செல்வதாகவும் இதனால் பூங்காவின் வருமானம் அதிகரித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

யால தேசிய பூங்கா உல்லாசப் பயணிகளுக்காக கடந்த மாதம் 16ஆம் திகதி மீளத் திறக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்தின் எல்லைப் புறத்தில் உள்ள இத் தேசிய பூங்கா பகுதியில் உள்ள, உகந்தை முருகன் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற சூரன்போர்த் திருவிழாவுக்கு ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் சென்றிருந்தனர்.

யுத்த சூழ்நிலை காரணமாக இப்பகுதிக்குப் பொதுமக்கள் செல்வது கடந்த பல வருடங்களாகத் தடைசெய்யப்பட்டிருந்தமை குறிப்பித்தக்கது.

## உயர் தொழில்நுட்ப கற்கைநெறி; விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாண உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் 2003 ஆம் ஆண்டிற்கான கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

4ஆண்டுக் கற்கை நெறிகளான உயர் தேசிய கணக்கியல் டிப்புளோமா(பகல், மாலை), உயர் தேசிய முகாமைத்துவ டிப்புளோமா, 2ஆண்டுக் கற்கை நெறிகளான- தேசிய வியாபாரக் கல்விடிப்ளோமா, தேசிய ஆங்கில டிப்புளோமா ஆகிய கற்கை நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி டிசம்பர் 10ஆம் திகதியாகும். மேலதிக விபரங்களை யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் பணிப்பாளர் நாயகம், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்,98, வார்ட் பிளேஸ், கொழும்பு 7 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## பட்டப்படிப்பை ஆங்கிலத்தில் பூர்த்தி செய்தால் விசேட கொடுப்பனவு

ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டப்படிப்பை பூர்த்தி செய்யும் ஆசிரியர் ஒருவருக்கு,- 20,000 ரூபாவும், பட்டப்படிப்பை ஆங்கிலத்திலேயே முற்றாகப் பூர்த்தி செய்பவர்களுக்கு 25,000 ரூபாவும் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்படும் என்று அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். அகில இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கத்தினர் அமைச்சரைச் சந்தித்தபோதே, அமைச்சர் மேற்கொண்டவாறு குறிப்பிட்டார்.

# மரணம் என் வாசலுக்கு வரும் வரை எழுத்தும் பேச்சும் தொடர வேண்டும்

**முதுமை நிறைந்தும் தளராது எழுதிக்கொண்டிருப்பவர் மூத்த எழுத்தாளர் சொக்கன். அவர் சிறுகதை, கவிதை, நாடகம் என்று ஆக்க இலக்கியத்துறையில் எழுதி பல சாதனைகள் புரிந்தவர். அவர் இங்கு மனந் திறக்கின்றார்.**

மூத்தொள்ளாயிரம் என்பது ஓர் பழந்தமிழ் இலக்கிய நூல், தலைவி ஒருத்தி, தான் விரும்பும் தலைவனை அடையத் தடையாய் இருக்கின்ற தாயின்மீது சீற்றம் கொண்டு, 'அன்னை இளையளாய் மூத்திலள் கொல்லோ? ' என்று தன் வெப்பிசாரத்தை வெளியிடுவதாக அந்த நூலின் ஒரு பாடலடி வருகிறது.

என் போன்ற முதியவர்களின் நோக்கையும் போக்கையும் அவதானிக்கும் இன்றைய இளைஞர்கள், எங்களை நோக்கி, "நீவிர் இளைஞராய் மூத்திலீர் கொல்லோ?" என்ற வினாவை எழுப்பினால் அதற்கு என்னைப் பொறுத்தவரை நான் அளிக்கக்கூடிய விடை இது தான். "தம்பிமாரே, சொல் தளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினனாகிவிட்ட நான், உங்களைப் போலவே ஒரு காலத்தில் இளைஞனாயிருந்து மூத்தவன் தான்"

எனது எழுபத்திரண்டாண்டு நான் பிறந்த திகதி (02-06-1930) நீண்ட பயணத்தில் இளமைத் துடுக்கும் இடைப்புகுந்தது. இன்று முதுமையின் அமைதியும் குறுக்கி விடுவதாகவே உணர்கின்றேன்! உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை!

நான் கண்டு கேட்டு உற்று உணர்ந்தனவும் கற்றனவும் எல்லாம், நான் ஓர் எழுத்தாளன் என்ற வகையிலே- காலத்துக்குக் காலம் சிறுகதைகளாக, கவிதைகளாக, நாடகங்களாக, கட்டுரைகளாக உருக்கொண்டு அவை நூல் வடிவம் பெறறன. நூல் வடிவம் பெறாதனவும் பல.

கால அடைவில் அவற்றை வைத்து நோக்கினால், நான் இளைஞனாயிருந்து மூத்ததற்கான கருக்களையும், உருக்களையும் கண்டு கொள்வது எளிதாயிருக்கும்.

எனது முதற் சிறுகதை எனது 14ஆம் வதில் (1944ல்) 'தியாகம்' என்ற பெயரில் வீரகேசரியில் வெளியானது. எனது முதல் நாடகம் எனது பதினெட்டாவது வயதில் (1948 இல்) 'கவிஞன் பலி' என்ற பெயரில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாயிற்று. எனது முதல் நாவல் 'மலர்ப்பலி' என் பத்தொன்பதாவது வயதில் (1949 இல்) ஈழகேசரியில் வெளியானது. என் முதற் கவிதை 'ஆசிரிய சமுதாயமே விழித்தெழு' என்ற தலைப்பில் என் 21 ஆவது வயதில் (1951 இல்) அதே ஈழகேசரியில் வெளியாயிற்று. கட்டுரையின் தொடக்கம் எப்பொழுது என்று கூறப் போதிய ஆதாரம் இல்லை. 1995 இல் ஏற்பட்ட இடப்பெயர்வின் போது, வீட்டில் விட்டுச் சென்று திரும்பிய வேளையில் பழைய பத்திரிகைத் துண்டுகள் யாவும் சிதைந்தும் அழிந்தும் போனதால் ஏற்பட்ட விபத்து இது.



கலாநிதி
க.சொக்கலிங்கம் (சொக்கன்)

1946 இல் 'மின்னொளி' என்ற சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் எனது 'கடைசி ஆசை' சிறுகதை முதற்பரிசு பெற்றது. 1961 இல் தினகரன் தமிழ் விழா நடத்திய அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் எனது சிறுகதை 'பிரயாணம்' இரண்டாம் பரிசு பெற்றது. 1966 இல் வீரகேசரி சிறுகதைப் போட்டியில் 'தபாற்கார சாமியார்' முதற் பரிசு பெற்றது.




1960 - 1961 ஆம் ஆண்டுகளில் இலங்கைக் கலைக்கழகம் நடத்திய தமிழ் நாடகப் பிரதிப் போட்டியில் நான் எழுதிய 'சிலம்பு' பிறந்தது, 'சிங்ககிரிக் காவலன்' நாடகப்பிரதிகளுக்கு தொடர்ந்து முதற் பரிசுகள் கிடைத்தன. 1972 இல் 'கடல்' சிறுகதைத் தொகுதிக்கும், 1979 இல் ஈழத்து தமிழ்நாடக இலக்கிய வளர்ச்சி ஆய்வு நூலுக்கும் சாகித்திய மண்டலம் பரிசு கிடைத்தது. 1992 இல் இலங்கை தமிழ் இலக்கியப் பேரவை 'சலதி' நாவலுக்கு முதற்பரிசு வழங்கியது.

1980 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, 1995 இல் இந்து கலாச்சார அமைச்சு, 1999 இல் க.வை.ஆத்மநாத சர்மா வெள்ளி விழா நினைவுக்குழு, 2000 இல் நல்லூர் பாலகதிர்காம தேவஸ்தானம், 2001 இல் இலங்கைக் கம்பன் கழகம் என்பன விருதுகளும் பட்டங்களும் வழங்கி என்னை கௌரவித்தன. வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருதும் 1999 இல் கிடைத்தது.

2001 மார்ச் மாதம் யாழ்ப்பாணப் பலகலைக்கழகம் தனது பட்டமளிப்பு விழாவின் போது 'கலாநிதி' (Ph.D) என்ற கௌரப்பட்டத்தை வழங்கியது. சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, கட்டுரை நூல்களாக இதுவரை 35 நூல்களும் மாணவர் பாட வழிகாட்டி நூல்களாக (தமிழ் இலக்கணம், இலக்கியம், சைவநெறி, இந்து நாகரிகம்) ஏறக்குறைய ஐம்பது நூல்களும் என் பெயரால் இதுவரை வெளிவந்துள்ளன.

யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கம், இலங்கைக் கம்பன் கழகம் (பழையது), இலங்கைச் சேக்கிழார் மன்றம், முத்தமிழ் வெளியீட்டுக்கழகம், அகில இலங்கைத் திருமுறை மன்றம், முதலாகப் பலசமய சமூக நிறுவனங்களிலே பொறுப்பான பதவிகளை வகித்ததும் உண்டு.

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்தும் பண்டிதர் வகுப்புக்களிலே கற்பித்து, கலை இலக்கிய மன்றங்களின் நிகழ்ச்சிகளிலே பார்வையாளனாகவும், பங்காளனாகவும கலந்துகொள்வது என்பன இன்று என் பயனுள்ள பொழுது போக்குகளாய் உள்ளன.

எழுத்துலகிலும், கல்வியுலகிலும் அரை நூற்றாண்டுக்கு மேலாக நான் பங்குகொண்டு பெற்ற அனுபவங்களையும் வாழ்க்கை ஓட்டத்தையும் தன்வரலாறாக (Auto Biography) எழுதிக் கொண்டிருக்கிறேன். லண்டனிலுள்ள என் இலக்கிய அன்பர்களான இ.பத்மநாத ஐயர், வைத்திய கலாநிதி க.சுகுமார் ஆகியோர் நான் லண்டனிலிலுருந்த காலத்தில் என்னை எழுதுமாறு ஊக்கியதன் விளைவே இந் நூல். இதனை அவர்களே வெளியிடவும் மகிழ்வுடன் இசைந்துள்ளார்கள்.

கண்களில் பார்வை குறையாத வரை, கை பேனை பிடிக்க முடியாத அளவு தளர்ச்சி அடையும்வரை, முதுமையின் அறளை என்னைப் படிககாதவரை, மரணம் வந்து என் வீட்டு வாயிற்கதவைத்தட்டாத வரை, என எழுத்தும், பேச்சும் தொடர வேண்டும் என்பதே என் ஆசை.

அது நிராசையாகாது காப்பதும், காக்காது விடுவதும்,

எனையாளும் நல்லை முருகன் செயல்!

**நேர்காணல் - மணிசேகரன்**

## கல்வி மேம்பாட்டுக்கான பணிகளை கூட்டுறவுத்துறை நிறைவேற்ற வேண்டும்!

### முன்னாள் எம்.பி. சிவமகாராசா உரை

(வடமராட்சி கிழக்கு)

மக்களுக்காக மக்களால் ஆக்கப்பட்ட ஜனநாயக கட்டமைப்பே கூட்டுறவுத்துறை. மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதையே அது குறிக்கோளாக கொள்ள வேணடும்.

இவ்வாறு கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் திரு.திருமதி. பாஸ்கரன் தம்பதிகளின் அன்பளிப்பு நிதி ஊடாக சுழற்சிமுறை இலகு கடனில் பயனாளிகளுக்கு 12 தையல் இயந்திரம் வழங்கும் வைபவம், சங்கத் தலைவர், த.சிதம்பரம் பிள்ளை தலைமையில் நெல்லியடி முருகமூர்த்தி ஆலய கலியாண மணடபத்தில் நடைபெற்ற போது, கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டுறவாளரும் 'நமது ஈழநாடு' நிர்வாகப் பணிப்பாளருமான சி.சிவமகாராசா கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது, கூட்டுறவுத்துறை முன்னர் உணவுப் பண்டங்களை வழங்குவதை மட்டும் நோக்கமாகக் கொண்டிருந்தது. அந்நிலை இன்று மாறிவிட்டது. கூட்டுறவுத்துறை மக்களுடைய வாழ்க்கையின் அபிலாஷைகளை நிறைவேற்றும் பொருட்டு அதற்கேற்ப செயற்பட வேண்டும்.கூட்டுறவு இன்று கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. கல்வி மேம்பாட்டிற்கு எவற்றைச் செய்யவேண்டுமோ அவற்றை எல்லாம் செய்யவேண்டும்.

கூட்டுறவுத்துறை தற்போது இலாபத்தை வழங்குவதை நிறுத்தி விட்டது.

கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் இயங்க வேண்டுமானால், பணியாளர்களும் பணிப்பாளர்களும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்றார். (17)

### தொழில்நுட்பக் கல்லூரி

## வருகைப் போதனாசிரியர்களின் சம்பளம் கிடைத்துள்ளது!

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் வருகை நேர போதனாசிரியருக்கு வழங்கவென ரூபா 9 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது.

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் விரிவுரையாளர்களிற்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் 15 நிரந்தர விரிவுரையாளர்களும், 150 வருகை நேரப் போதனாசிரியர்களும் கடமை யாற்றி வருகின்றனர்.

இவர்களில வருகை நேர போதனாசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் 2002 ஜனவரியில் இருந்து நிலுவையாக இருந்தது. இந் நிலுவைக் கொடுப்பனவுக்கான நிதியை, சம்பந்தப்பட்ட திணைக்களத்திலிருந்து தொழில் நுட்பக்கல்வி பயிற்சி திணைக்கள பிரதி பிராந்தியப் பணிபபாளர் என்.யோகராஜன் எடுத்து வநதுள்ளார்.

## வடமராட்சியில் மாவீரர் நினைவுப் பதாகைகள்

(வடமராட்சி)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தல் வீரமரணத்தைத் தழுவிய மாவீரர்களை நினைவு கூறும் பதாகைகள் வடமராட்சிப் பிரதேசத்தில் கட்டப்பட்டுள்ளன.

பொது இடங்கள், மற்றும் வாகனங்களில் பொது அமைப்புக்களால் இவை கட்டப்படடிருப்பதை அவதானிக்க முடிகிறது. (23)

## நியமனக் கடிதம் இன்மையால் தொழிலிழந்த 'நான்' அதிகாரிகள்

(நெல்லியடி)

யாழ்.கச்சேரி 'நான்' அலுவலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாக கடமையாற்றிய 5 பேர் வேலை இழந்திருப்பதாக தெரியவருகிறது.

இவர்களுக்கு புரட்டாதி மாதத்துக்கான வேதனம் வழங்கப்படாததுடன், இவர்களது பதவி தொடர்பில் உரிய நியமனக் கடிதங்களும் வழங்கப்படவில்லை. இவ்வாறு நியமனக் கடிதம் இல்லாமையே இவர்களது பதவி இழப்பிற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

. இதேவேளை, கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட RRAN திட்டங்கள் தொடர்பில் பல குறைபாடுகள சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து இத் திட்டங்கள் மீளாய்வுக்கு உட்படுததப்பட்டுள்ளன. இம் மீளாய்வுக்கென யாழ்செலயகத்தினால் 3 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. (13)

### சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கான

## சுய விருப்பில் ஒய்வுபெறும் திட்ட சுற்று நிருபம் ரத்து

### அமைச்சர் போகல்லாகம நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை நிர்வாகத்தினால் சுயவிருப்பில் ஓய்வு பெறுதல் தொடர்பாக அனுப்பப்பட்ட சுற்று நிருபத்தை மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்துவதாக கைத்தொழில் அமைச்சர் றோகித போகல்லாகம உறுதியளிததுள்ளார்.

தொழிற்சாலை ஊழியர்களுக்கு குறைந்த தொகையிலான சுயவிருப்பு ஓய்வு எனும் திட்டமொன்றை சீமெந்து கூட்டுத்தாபனம் அறிவித்தது.

இந்தத்திட்டத்தில் வேலை வழங்கப்படாதிருக்கும் தொழிலாளர்களுக்கு மட்டும் டிசம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்பு தங்கள் தங்கள் விண்ணப்பங்களை கொடுக்கும்படியும் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டது.

ஆனால் கார்த்திகை மாதம் 31 ஆம் திகதிக்கு பின்பு வேலை வழங்கப்படாத தொழிலாளர்களை கையொப்பமிட வேண்டாமென சுற்று நிருபத்தில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக கார்த்திகை மாதத்துடன் சம்பளம் வழங்கப்படமாட்டாது எனப் புரிந்து கொண்ட பொதுத்தொழிலாளர் யூனியன்,

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த சங்கரியின் உதவியுடன்- கைத்தொழில் அமைச்சர் போகல்லகமவைச் சந்தித்தது.

இதன்போது சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை எடுத்து விளக்கிய போது அதனை ஏற்றுக் கொண்ட அமைச்சர் -

குறைநதளவு தொழிலாளர்களே கூட்டுத்தாபன சேவையில் உள்ளதாகவும், அவர்களுக்கான நஷ்ட ஈடு பற்றி மீள்பரிசீலனை செய்வதாகவும் உறுதியளித்துள்ளார்.

இதனையடுத்து நிர்வாகத்தினால் அனுப்பப்பட்ட சுற்று நிருபம் மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாச்சிமார் கோவிலடி விபத்தில் ஓட்டோவில் சென்ற 2 பேர் காயம்

(நாவாந்துறை)

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியை அண்டிய அரசடிச் சந்தியில் நேற்று முன்தினம் ஓட்டோ ஒன்று விபத்துக்குள்ளாகியதில் இருவர் படுகாயம் அடைந்துள்ளதுடன, ஓட்டோவும் பலத்த சேதமடைநதது.

சிவப்பிரகாசம் வீதியூடாக வேகமாக வந்த ஓட்டோ, அரசடிச் சந்தியை நோக்கித் திரும்ப முற்பட்டபோது - எதிரே வந்த வாகனத்தினுடனான மோதலைத் தவிர்ப்பதற்காக திரும்பியசமயம் கட்டுப்பாட்டினை இழந்து அருகிலிருந்த மின்கம்பத்தோடு மோதியது.

இச் சம்பவத்தில் ஓட்டோ சாரதியும், அதில் பயணம் செய்த ஒருவரும் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (66)

# கிழக்கில் காவல்துறை நிலையங்கள் போர் நிறுத்தத்தை மீறுவதாகாது !

## உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு நிருபர்)

விடுதலைப்புலிகள் கிழக்கு மாகாணத்தில் தமது காவல்துறை நிலையங்களை அமைத்து வரும் செயலானது அவர்களது கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே நடைபெறுவதால் அது போர்நிறுத்த உடன்பாட்டினை மீறும் செயலாக அமையமாட்டாது என அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியுள்ளார்.

பொலிஸ் திணைக்களத்திற்கான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் நடைபெற்றபோது அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது, நெடுந்தீவில் நடைபெற்று வரும் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்படுமென்றும் தெரிவித்தார்.

கிழக்கில் புலிகள்தமது காவல்துறை நிலையங்களை அமைத்து வருவதானது போர் நிறுத்த உடன்பாட்டினை மீறும் செயலென்றும் இதுபற்றி எதிர்வரும் ஒஸ்லோ சந்திப்பில் புலிகளுடன் பேசப்பட வேண்டுமென்றும முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்குமுகமாகவே- ஜோன் அமரதுங்க இவ்வாறு கூறினார்.

## பெண்ணிடம் சங்கிலி அபகரிப்பு

(மல்லாகம்)

மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் வடக்கு வீதியால் சென்று கொண்டிருந்த பெண்ணின் கழுத்திலிருந்த தாலியும் சங்கிலியும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அறுத்துச் செல்லப்பட்டது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது தையிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது மல்லாகத்தில் வசிக்கும் க.சின்னம்மா (வயது 66) என்பவரின் 71/2 பவுண் நிறையுடைய நகைகளே அபகரிக்கப்பட்டன.

(68)

## அமுக்கவெடியில் சிக்கிய லான்ட்மாஸ்ரர்

(மீசாலை)

சாவகச்சேரி கெருடாவிலில் லான்ட் மாஸ்ரர் ஒன்று அமுக்க வெடியில் சிக்கி பாரிய சேதமடைந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் தெய்வாதீனமாக உயிரிழப்புக்கள் ஏதும் ஏற்படவில்லையாயினும் அதிர்ச்சி காரணமாக மயக்கமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(25)

# ஈ.பி.டி.பியினர் ஆயுதங்களை நெடுந்தீவுக்கு எடுத்துச்செல்லவில்லை

## கட்சியின் நிலைப்பாட்டை விளக்கி டக்ளஸ் தேவானந்தா அறிக்கை

தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக அரசியல் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான முயற்சியில் அனைத்து அரசியல் சக்திகளும் தத்தம் பங்களிப்பை நல்க வேண்டும். இவ்வாறு ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். நெடுந்தீவுச் சம்பவத்தை அடுத்து நேற்று ஈ.பி.டி.பியின் அரசியற்பீடக் கூட்டத்தின் பின்னர் விடுத்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நெடுந்தீவுப் பிரதேசத்திற்கு யாழ்ப்பாண மாவட்டப் பிரதம அமைப்பாளர் வி.கே.ஜெகன் தலைமையிலான குழுவினர் கடந்த சனியன்று காலையில் சென்றடைந்தனர். கடந்த 05.10.2002ம் திகதியன்று நெடுந்தீவிலிருந்து எமது கட்சி அலுவலகம், புலிகள் உறுப்பினர்கள் சிலராலும், அவர்களால் தூண்டி விடப்பட்டவர்கள் எனக் கருதப்படும் சிலராலும் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து எமது கட்சி உறுப்பினர்கள் நெடுந்தீவிலிருந்து பின்வாங்கி இருந்தனர் என்பது தெரிந்ததே.

எனினும், ஜனநாயக அரசியல் சூழல் நிலை பெறுவதை உத்தரவாதப்படுத்தும் நோக்கிலும், எமது கட்சியினால் நிர்வகிக்கப்படும் நெடுந்தீவுப் பிரதேசசபையின் பணிகளை முன்னெடுக்கும் வகையிலும், எமது கட்சி உறுப்பினர்களும், தோழர்களும்,ஆதரவாளர்களும் கடந்த சனியன்று மீண்டும் நெடுந்தீவு சென்றனர்.

சிவில் நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கும் கடமைப்பொறுப்புடைய பொலிஸாரின் அனுசரணையுடன் சென்ற எமது கட்சியினர் முன்னைய அலுவலகத்தைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில், சனியன்று காலை பத்து மணியளவில் புலிகளின் உறுப்பினரான கண்ணன் என்பவரால் அணிதிரட்டப்பட்ட சிலர், கட்சித் தோழர்களின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். கடைகளைத் திறக்கவேண்டாம் எனத்தடுத்தும், நெடுந்தீவுக்கான போக்குவரத்துப் படகைச் சேவையில் ஈடுபடவிடாது தடுத்தும் இயல்பு நிலையைக் குழப்பினர். எனினும், மிகுந்த பொறுமையுடன் கட்சியின் அலுவலகத்தைச் சீரமைக்கும் பணியில் எம்மவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரைப் புலிகள் வரவழைத்து, ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவிலிருந்து வெளியேற்ற வேண்டும் எனத் தெரிவித்தனர். எனினும், புலிகளின் இந்தக் கோரிக்கை நியாயமற்றது என்பதைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுக்குச் சுட்டிக் காட்டிய ஈ.பி.டி.பியினர் பிரதேச சபையின் பணிகள் முன்னெடுக்கப் படுவதற்காகவும், கட்சியின் ஜனநாயக அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும் நெடுந்தீவில் தங்கியிருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர்.

இருதரப்புக் கருத்துக்களையும் கேட்டறிந்த கண்காணிப்புக் குழுப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# 4 முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் கிழக்கில் ஆட்திரட்டுகின்றன

## குற்றப் புலனாய்வுப் பொலிஸார் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு தீவிரவாத அமைப்புகளில் ஆயுதப்பயிற்சி பெற்ற நான்கு முஸ்லிம் குழுக்கள் கிழக்கு மாகாணத்தில் இயங்கி வருகின்றன என்ற தகவல் குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்கு கிடைத்துள்ளதாக 'லங்காதீப' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த அமைப்புக்களின் ஊடாக உள்ளூரில் உறுப்பினர்கள் பலரைத் திரட்டி, பயிற்சிக்காக வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றும் -

இந்தக் குழுக்களின் தலைவர்கள் ஆயுதங்கள் வைத்திருக்கும் புகைப்படங்கள் குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்கு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசுக்கு கிடைத்த தகவலின் படி ஒசாமா, நொக்ஸ், ஜெட்முஜாகுதீன் என்ற பாகிஸ்தான், பங்களாதேஷ், ஈரான், குவைத், லிபியாவில் உள்ள தீவிரவாத அமைப்புக்களில் பயிற்சி பெற்றவர்கள் இக் குழுக்களில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# விண்வெளியில் பக்ரீரியாவுக்கு எதிராக புதிய சாதனம் !



விண்வெளியில் காணப்படும் பக்ரீரியாக்களை எதிர்த்து போராடுவதற்காக அவற்றைக் கண்டறியும் சாதனம் ஒன்றை 'நாசா' விண்ணியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பூமி மேற்பரப்பில் இதுவரை காணப்படாத இந்த விண் பக்ரீரியாக்கள் மிகவும் கொடூரமானவை எனக் கூறப்படுகிறது. விண்வெளி செல்லும் வீரர்களின் உயிரைப் பாதுகாப்பதற்காகவே இச்சாதனம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சாதனம் பக்ரீரியாவின் D.N.A அமைப்பை நேரடியாக தாக்கக்கூடியது எனக்கூறப்படுகிறது.

உலகவலம்

# பொலிஸ் வாகனமென நினைத்து பஸ் மீது கண்ணிவெடித் தாக்குதல்

## ஆந்திரா மாநிலத்தில் 14 பொதுமக்கள் பலி

(ஹைதராபாத்)

இந்தியாவின் ஆந்திரமாநிலத்தில் - நக்சலைட்டுக்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களால் நடாத்தப்பட்ட தாக்குலொன்றில் பஸ்சொன்று சிக்கியதில் 14 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

40 பேரோடு சென்று கொண்டிருந்த இந்த பஸ்சிலிருந்த இன்னும் பலர் படுகாயமடைந்தனர்.

ஆந்திர மாநிலத்தலைநகர் ஹைதராபாத்திலிருந்து 200 கிலோமீற்றர்கள் தொலைவிலுள்ள வாராங்கல் மாவட்டத்தின் ஒரு கிராமத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.



ஆந்திரா மாநிலத்தில் நக்சலைட்டுக்கள்

இந்த மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மாவோயிச சித்தாந்தத்தைப் பின்பற்றும் நக்சலைட்டுக்கள் பரவலாக இருப்பதால் இத்தாக்குதலை அவர்களே நடத்தியிருக்க முடியும் எனப் பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை- குறிப்பிட்ட பஸ்சை, பொலிசாரின் வாகனமெனக் கருதியே நக்சலைட்டுக்கள் தாக்கியதாகவும் கண்ணிவெடித் தாக்குதலுக்கு முன்னர் பஸ் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதிலிருந்து இது புலனாவதாகவும் உள்ளூர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பகுதியில் பொலிசார் நடத்திய தாக்குதலொன்றில் இரண்டு பெண்களுட்பட ஐந்து நக்சலைட் போராளிகள் கொல்லப்பட்டதன் பின்னர் இச்சம்பவம் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் அமெரிக்காவின் தலையீடு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அதிருப்தி!

(புதுடெல்கி)

ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடு அதிகாரம் செலுத்த முடியாது. ஈராக்கின் மீதான நடவடிக்கைகள் யாவுமே தனிப்பட்ட நாடொன்றினால் செய்யப்பட முடியாது. மாறாக ஐக்கிய நாடுகள் சபையே அதனைத் தீர்மானிக்க முடியும், இவ்வாறு இந்தியப்பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்துளளார்.



சீக்கியர்களின் மதப்பண்டிகை ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போது அவர் இவ்வாறு தெரிவித்த கருத்துக்கள்- அமெரிக்காவினையே நேரடியாகச் சாடுபவையாக இருந்தன.

தொடர்ந்தும் வாஜ்பாய் பேசுகையில்- இனிமேலும் ஈராக் மீது போர் ஒன்று தேவையில்லை. அவ்வாறு ஒன்று நடைபெறக் கூடாது என்றே நாம் விரும்புகின்றோம்.

ஈராக் தனது ஆயுதங்களை அழிப்பது - அதன் பாட்டிலேயே செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார்.

வாஜ்பாயின் இந்த அறிவித்தல் ஈராக்குக்கு சாதகமானதாக அமைந்திருப்பதாகவும்,

இந்தியாவிற்குத் தேவையான எண்ணெயை ஈராக்கிடமிருந்தே அந்த நாடு பெறுவதால் ஈராக்குடன நல்லுறவைப் பேணவே இந்தியா விரும்புமென்றும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை - அமெரிக்காவுடனான இந்தியாவின் முறுகல் நிலை அதிகரித்திருப்பதை இந்தக் கருத்து தெளிவாகக் காட்டுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# ஆங்கிலம் தெரிந்திருந்தாலே நியூசிலாந்தில் குடியேறலாம்

(வெலிங்ரன்)

நியூசிலாந்து நாட்டுக்குள் வரும் குடியேற்றக்காரர்கள் ஆங்கில மொழியை அவசியம் கற்றிருக்க வேண்டுமென - அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை விடுத்த குடியேற்ற விவகார அமைச்சர் லியான்னே டல்ஸியல- ஆங்கில மொழி தெரியாத குடியேற்றக்காரர்களால் பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் - உள்ளூர் சமூகத்துடன் இணைந்து நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்க முடியாத நிலையில் குடியேற்றக் காரர்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனால் - இனிமேல் நியூசிலாந்துக்கு குடிவருபவர்கள், ஆங்கில் மொழியில் பரீட்சையொன்றுக்குத் தோற்ற வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மக்கள் போராட்டத்திற்கு மதிப்பு அளிக்க வேண்டும்

## கண்காணிப்புக் குழுவுக்கு இளம்பரிதி கடிதம்

கடந்த நான்கு நாட்களாக நெடுந்தீவில் நடைபெறும் மக்கள் போராட்டத்திற்கு மதிப்பளித்து அவர்களின் இயல்பு வாழ்விற்கு ஆவன செய்யுமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப் பாளர் இளம்பரிதி அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது-

அதிகாலை 3 மணியளவில் 43 ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் ஸ்ரீலங்காப் பொலிசாரினால் வழங்கப்பட்ட சீருடைகளினை அணிந்து கொண்டு பொலிசாரினதும் கடற்படையினரி னதும் உதவியுடன் பொலிசார் பாவித்த இரண்டு சில்லு உழவு இயந்திரத்தின் மூலம் முன்பு தமது முகாம் இருந்த இடத்தினை அடைந்துள்ளனர். இதனை ஜன நாயக ரீதியில் எதிர்க்க முயன்ற மக்கள் மீது பொலிசார் 10இற்கு மேற்பட்ட கண்ணீர்புகைக் குண்டுகளை வீசியும் ஆகாயத்தை நோக்கிச் சுட்டும் றைபிளினால் அடித்தும் பொது மக்கள் மூவரைக் காயப்படுத்தியுள்ளனர். இதன் போது- பேபி (வயது 42), பிரான்சிஸ் (வயது 65), பாலன்(வயது 45) ஆகியோர் காயப்பட்டனர். மேலும் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்களை அங்கிருந்து அகலு மாறும் இல்லையேல் படு மோச மாக அதாவது, ஐந்து படையின ருக்கு ஒரு பெண் என்ற வீதத்தில் வல்லுறவுக்குட்படுவார்கள் என்றும் மிரட்டியுள்ளனர். ஈ.பி.டி.பி யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் என்று கூறப்படும் ஜெகன் என்பவர் இராணு வச்சீருடையில் அங்கு நடமாடியுள் ளார். ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் ஆயு தங்களுடன் நடமாடுகின்றார்கள்.

மேலே விபரிக்கப்பட்ட புரிந்து ணர்வு உடன்படிக்கைக்கு எதிரான சட்டபூர்வமற்ற சம்பவங்களைத் தங்களின் மேலான கவனத்திற்கு சமர்ப்பிப்பதோடு, யுத்தநிறுத்த ஒப்பந்தம் சீராக நடை முறைப்படுத் தப்பட வேண்டியதை கண்கா ணிக்க வேண்டிய பொலிசார் தமது சீருடைகளையும், வாகனத்தையும் ஈ.பி.டி.பியினருக்கு வழங்கி கடற்ப டையினருடன் இணைந்து அவர்க ளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது கடுமையாகக் கண்டிக்கப்பட வேண் டியதாகும் எனக் குறிப்பிடப்பட் டுள்ளது.

இதேவேளை, இத்தகைய கடிதம் ஒன்றை தீவக நலன் காப்பகமும் கண்காணிப்புக் குழுவி ற்கு அனுப்பியுள்ளது.

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD
AVAILABLE COURSES
- MS OFFICE 2002
- VISUAL BASIC 6.0
- ORACLE 8.i
- JAVA 2
- HARDWARE
- $C^{++}$
Closing Date: 15.12.2002
Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223,Kasthuriyar Road, Jaffna.
(Opposite of J/Hindu Primary School)

# ஈ.பி.டி.பியை வெளியேற்றக் கோரி கண்காணிப்புக் குழுவிடம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

மக்களின் எதிர்ப்பை மீறி நெடுந்தீவில் மீள வந்திறங்கிய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரை அங்கிருந்து வெளியேற்றக் கோரி நேற்று யாழ். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.



நேற்றுக்காலை 10 மணியள வில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் ஒன்று கூடிய யாழ். மாவட்டத்திலுள்ள பொது அமைப் புக்களினதும் அரசசார்பற்ற நிறுவனங்களினதும் தலைவாகள், செயலாளர்கள், மற்றும் பல்கலைக கழகம், தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் மாணவர் தலை வர்களும் ஒன்றுகூடி மேற்படி விட யம் தொடர்பாக கலந்துரையாடல் நடாத்தினர்.

இக்கலந்துரையாடல் முடிவில் 11 மணியளவில் மேற்படி தரப்பினர் அனைவரும் பேரணியாக யாழ் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்திற்கு சென்று அங்கு மகஜர் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தலைவர் பரணிதரனின் தலைமையுரையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில், யாழ். மாவட்ட வெகுஜன ஒன்றியத் தலைவர் பரமநாதனும் உரையாற்றி னார். பின் யுத்த நிறுத்த கண் காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட பிரதிநிதி ஒலே புருண்டத்திடம் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பரணிதரன் மேற்படி தரப்பினர் அனைவரினதும் மகஜர்களை ஒன்று சேர்த்து கைய ளித்தார்.

மேற்படி மகஜர்களைப் பெற்றுக் கொண்ட போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழுவின் யாழ்.பிரதிநிதி உரையாற்றுகையில், இவ் விடயம் தொடர்பாக நாம் விழிப்பாகவே இருக்கின்றோம். நெடுந்தீவுக்கு தற்போது ஒவ்வொரு நாளும் சென்று வருகிறேன். நேற்று அங்கு சென்று மக்களுடன் கலந்தரையாடி னேன். இதன் தொடர்ச்சியாக இன் றைக்கும் நெடுந்தீவுக்குச் செல்லவுள் ளேன். இப்பிரச்சினையை நாம் சுமுகமாகத் தீர்க்கத்தான் விரும்பு கிறோம். ஆனால் இப்பிரச்சி னையை நாம் மட்டுந்தான் தீர்க்க வேண்டுமென்பதல்ல. சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய முறையில் கல ந்தாலோசனை நடாத்துவதன் மூலமாகவும் நெடுந்தீவு மற்றும் யாழ்ப்பாண மக்கள் ஒன்று சேர்ந்து மேற்படி சம்பந்தப்பட்ட தரப்பின ருடன் சுமுகமாக கலந்துரையாடுவ தன் மூலமாகவும் தீர்க்கலாம்.

எனினும், இவ்விடயம் தொடர் பாக அனைத்துத் தரப்பினருடனும் மிக விரைவில் பேசித் தீர்வு காண வுள்ளோம் எனவும் ஒலே புருண்டம் நேற்று மேற்படி மகஜரைப் பெற்றுக் கொண்டபின் தெரிவித்தார்.

இம்மகஜர் கையளிக்கும் வைப வத்தின் போது, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன், வெகுஜன ஒன்றியத் தின் தலைவர் பரமநாதன், பொது அமைப்புக்களின் தலைவர் சூ.சொ லமன் சிறில், கூட்டுறவாளர் சி.வி.கே.சிவஞானம், வட மாகாண கடற்தொழில் கூட்டுறவுச் சங்க ங்களின் சமாசத் தலைவர் தவரட் ணம் ஆகியோரும் மேற்படி சங்க ங்களின் செயலாளர்களும் மற்றும் ஆட்டோ, வாடகைக்கார் சங்கத்தின் தலைவர், சிகை அலங்கரிப்பாளர் ஒன்றியத் தலைவர், யாழ்.வர்த்தக சங்கத் தலைவர், மற்றும் பல பொது அமைப்புக்களினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் தலைவர், செயலாளர்களும் மற்றும் பிரதிநிதிகளும் இம் மகஜர் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (லி)

## ஈ.பி.டி.பியினர் ஆயுதங்களை...

பிரதிநிதிகள் தலைமைப்பீடங் களுடன் கலந்து ஆராய்வதற்காக யாழ்ப்பாண நகருக்குச் சென்றிருந் தனர். ஆனால் மாலையில் இருள் கவியத் தொடங்கியதும் மின்விளக் குகளைப் பொருத்தியும், கற்களை எறிந்தும் புலிகள் தொந்தரவு செய்தனர். இதனால், கட்சி அலு வலகத்துக்கு அருகாமையிலுள்ள வேறொரு இடத்திற்கு தற்காலிக மாகச் சென்ற கட்சி உறுப்பினர்கள் மீண்டும் ஞாயிறு காலையில் கட்சி அலுவலகத்திற்கு வருவதைப் புலிகளால் தூண்டப்பட்டோர் தடுத் தனர். பாதுகாப்புப் பணியில் ஈடுபட் டிருந்த பொலிஸார் அசம்பாவிதங் கள் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்தி னர். இந்த நிலையில் மீண்டும் வந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நெடுந்தீவுப் பிரதேசப் புலிகளின் பொறுப்பாளர் கண்ண னுடன் பேசினர். இந்தப் போரா ட்டத்தைத் தம்மால் இடைநிறுத்த முடியாது என அவர் கூறியுள்ளார்.

இதன் பின்னர் ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவிலிருந்து விலகிச் சென் றால் என்ன? என்ற ஆலோசனை யைக் கண்காணிப்புக் குழுப் பிரதி நிதி முன் வைத்த போது, ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் அதனை முற்றாக மறுத்தனர். இது ஒருதலைப்பட் சமானது, ஜனநாயக விரோதமா னது எனச் சுட்டிக் காட்டினர். இந் நிலையில் இது சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவது சம்பந்தமான பிரச்சினை. எனவே இதில் தாம் தலையிட முடியாது எனக் கூறிக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் விலகிச் சென்றனர்.

அதன் பின்னர் பொலிஸார் மேலதிகமாக வரவழைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் உரிய பயனைத் தராத நிலையில் கடற்படையினரும் உதவிக்கு அழைக்கப்பட்டனர். இதனையடு த்து காலையில் மீண்டும் தமது அலுவலகத்திற்கு ஈ.பி.டி.பி. உறுப் பினர்கள் சென்றடைந்தனர்,

எனினும், பாடசாலைகளிலி ருந்து மாணவர்களைப் பலவந்த மாக அழைத்து வந்த புலிகள் பேரணி நடாத்த முற்பட்டதோடு அம் மாணவர்களைக் கவசமாகப் பயன்படுத்தி பிஸ்ரல் வேட்டுக் களையும் தீர்த்துள்ளனர். இதனை யடுத்துப் பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்து நிலை மைகளைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளனர். நிலமை இவ்வாறிருக்க ஈ.பி.டி.பி.யினர் ஆயுதங்களை மறைவாக எடுத்துச் சென்றதாகவும், இராணுவ பொலிஸ் சீருடையில் காணப்பட்டதாகவும் கூறுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வலி.வடக்கு,தெற்கு அமைப்புக்கள் கண்டனம்

பேரினவாதத்தின் கோரப்பசிக்கு தீனிபோடும் வகையில் ஈ.பி.டி.பி கட்சியினர் நெடுந்தீவில் மேற்கொண்டு வரும் அடாவடித்தனத்தை எம்மால் எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது என வலி-வடக்கு, தெற்கு பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

# ஒஸ்லோ மாநாட்டில் இந்தியா, இணங்கவைக்க தீவிர முயற்சி !

(புதுடெல்கி)

அடுத்த திங்களன்று ஒஸ்லோ வில் நடைபெறவுள்ள இலங்கைக் கான நிதியுதவி மற்றும் சமாதான முயற்சிகளுக்கான ஆய்வு மாநா ட்டில் இந்தியாவையும் கலந்து கொள்ளச் செய்ய இலங்கை அரசு முயற்சிகள் எடுத்து வருகிறது.

இதன் ஒருகட்டமாக அமைச்சர் கள் மிலிந்தவும், ரவூப் ஹக்கீமும் நாளை புதுடெல்கி புறப்படுகின்ற னர். நோர்வேத் தூதுவர் வெஸ் ட்பேர்க்கும் புதுடெல்கி செல்லவுள் ளார். விடுதலைப்புலிகள் இந்தி யாவில் தடை செய்யப்பட்ட அமை ப்பாக உள்ள நிலையில் அவ்வ மைப்பு கலந்து கொள்ளும் ஒரு மாநாட்டில் இந்தியாவும் கலந்து கொள்ளப் பின்னடிப்பதாக இந்தி யத் தரப்பில் தெரிவிக்கப்படுகி றது. இது குறித்து ஆலோசித்து வரு கிறோம் என இந்திய வெளியுறவுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## காலியில் பொலிஸ் சூட்டில் முஸ்லிம் இளைஞன் பலி

(கொழும்பு நிருபர்)

காலியில் - முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து பொலிசார் மேற்கொண்ட துப்பா க்கிப் பிரயோகத்தில் முகமட் றமீஸ் (வயது22) என்ற முஸ்லிம் இளைஞன் கொல்லப்பட்டார்.

அப்பகுதியில் நேற்று மாலை முதல் இன்று அதிகாலை வரை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து சிங்களவர்களுடைய பெற்றோல் நிலையம் ஒன்று, கடைகள், வாக னங்கள் என்பன முஸ்லிம்களால் தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

அங்கு தொடர்ந்து பதற்றம் நிலவி வருகின்றது.

(01)

## வீதிக்கு...

ததால் பொலிசார் பின்வாங்கிச் சென்றனர்.

பின்னர் பொலிசார் அங்கிருந்த பொதுமக்களின் சைக்கிள்களைத் தூக்கி வீசியதாகவும் தெரியவரு கின்றது.

## இன்று...

பெற்ற பொது அமைப்புக்களின தும் மாணவர் அமைப்புக்களினதும் கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

தீவகத்திலுள்ள ஈ.பி.டி.பி யினர் இன்று வெளியேறாத விடத்து தொடர்ந்து எத்தகைய நடவடிக்கை களில் ஈடுபடுவது என்பது குறித்து இன்று மாலை 4.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் கலந்து ரையாடல் ஒன்று இடம்பெறவுள் ளது . இதில் அனைத்துப் பொது அமைப்புக்களினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் தலைவர், செயலாளர்களை கலந்து கொள் ளுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

(லி)

## அமைதி...

நடைபெறும் இக்கூட்டத்தை, நோர்வே வெளிநாட்டமைச்சர் ஜோன் பீற்றர்சன் ஆரம்பித்து வைக் கவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், விடுத லைப் புலிகளின் அரசியல் ஆலோ சகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

அமெரிக்க இராஜாங்க அமைச் சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ், சர்வதேச அபிவிருத்திக்கான பிரிட்டிஷ் அமை ச்சர் கிளாயர் ஷோர்ட், ஐரோப்பிய யூனியன் ஆணையாளர் மார்கட் வோல்ஸ்ரோம் மற்றும் ஜப்பான், ஜேர்மனி, சுவீடன், ஐரோப்பிய யூனி யனின் தலைமை நாடான டென் மார்க் ஆகியவற்றின் உயர் மட்ட அதிகாரிகள் ஆகியோரும் ஒஸ்லோ சந்திப்பில் பங்குபற்றுவார்கள் என நோர்வே வெளிவிவகார அமைச் சின் உத்தியோகபூர்வ அறிவிப்புச் கூறுகின்றது.

நீங்கள்
அரச,
தனியார் துறைகளில்
வேலைவாய்ப்புகளைத் தேடுபவரா?
உங்களுக்கு உதவத்
தயாராகின்றது 'நமது ஈழநாடு'!
அடுத்த வாரம் முதல்
அறிமுகமாகின்றது!
வேலை வங்கி
- பிரதி வியாழன் தோறும் -
உங்களின் எதிர்காலத்தை வளப்படுத்த
நாமும் இணைகின்றோம்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.11.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.